சிவாலயதேவர்முதலாயுள்ள, ஏயகருங்கடல்புடைசூழுலகமெல்லா-மெடுத்தினிதுபாராட்டிற்றென்னவந்தத், தூயகதையடைவுபடச்சொல்லியொன்று சோழனுரை செயக்கேட்டுக் குன்றைவேந்தர். (௪௪)

இ-ள். ஆராய்ச்சிசெய்யும் வேதமொழியையுணர்ந்த நம்பியாண்டார் நம்பியருள்செய்த கலித்துறையந்தாதியைச் செவ்வியதிருமுறைகண்டசோழராகிய ராஜராஜதேவர் சிவாலயதேவர் ஆதியாயுள்ளவர்களும் சமுத்திரத்தாற்சூழப்பட்ட உலகத்தார்யாவரும் போற்றியன்புடன்பாராட்டிக்கொண்டு வந்தார்களென்றுசொல்லத் தெய்வத்தன்மையுள்ள அச்சரித்திரத்தை முறைமையாகச் சொல்லவேண்டுமென்று சோழமகாராஜாகேட்க அதனைக்கேட்டு சேக்கிழார்சுவாமிகள்என்க.

தில்லைவாழந்தணரேமுதற்பண்பாடு-திருநீலகண்டத்துப்பாணரீறுச், சொல்லியதொண்டத்தொகைநூல் வகையந்தாதித்தொடர்ச்சியினைவிரித்துரைக்கவளவன்கேட்டு, மெல்லியலாள்பங்கர்திருவருளைநோக்கிவியந்தடிமைத்தொண்டுசெய்துபேறுபெற்ற, செல்கதியைநினைந்துருகிவளவர்கோமான் சேவையர்காவலனைமுகநோக்கிச்சொல்வான். (௪௫)

இ-ள். தில்லைவாழந்தணர்முதல் இசைநூலில்வல்ல திருநீலகண்டயாழ்ப்பாணர் ஈறுகச்சொல்லிய திருத்தொண்டத்தொகைப் பதிகத்திற்குவகைநூலாகிய நம்பியாண்டார் நம்பிதிருவந்தாதித் தொடர்பினை விரிவாயெடுத்துச்சொல்ல அதனைச்சோழ மகாராஜாகேட்டு பார்வதிபாகராகிய பரமசிவத்தின் திருவருளைநோக்கி அதிசயித்து அடிமைத்தொண்டுசெய்து சிவபோகப் பேற்றினையடைந்த முன்னையகதியை நினைந்து மனமுருகிச்சோழமகாராஜா சேக்கிழார்சுவாமிகள் திருமுகத்தைப்பார்த்து கூறுகின்றாராக-என்க,

அவரவர்கண்டவர்களிருந்தவூர்வந்-தவதரித்ததிருமரபுதிருப்பேர்செய்த, சிவசமயத்திருத்தொண்டுமுற்பிற்பாடு-சிவனடிக்கீழுயர்பரமமுத்திபெற்றோர், எவருமறியச்சீவன்முத்தராயிங்-கிருப்பவர்களினிமேலும்பிறப்போர்மண்மேல், அவர்களைச்சேர்ந்தருள்பெற்றோர்பகைத்துப்பெற்றோ-ரவர்கள்பகையாய்நரகிலடைந்தபேர்கள். (௪௬)

இ-ள். அந்தந்த அடியார்கள் அவதரித்த நாடுகளும் அவர்களிருந்தவூர்களும் திருமரபுகளும் பெயர்களும் சைவசமயத்தில் செய்து

கொண்டிருந்த திருத்தொண்டும் முற்காலத்திலும் பிற்காலத்திலும் பரமசிவத்தின்திருவடிக்கீழ் சிறந்தபர முத்தியைப் பெற்றவர்களும் யாவரும் அறியும்படி ஜீவன்முத்தர்களா யிங்கிருப்பவர்களும் உலகின்கண் இனிப்பிறப்பவர்களும் அவர்களையடைந்து திருவருளைப்பெற்றவர்களும் சிவனடியார்களைப்பகைத்து கதியடைந்தவர்களும் அவர்களுக்குப்பகைவராய் நரகமடைந்தவர்களும்-என்க.

இல்லறத்திலிருந்துநனிமுத்திபெற்றோரில்லறத்திற்சிற்றி
ன்பவியல்பைநீக்கி,நல்லறமாந்துறவறத்தினின்றுபெற்றோர்நற்
பிரமசாரிகளாயருள்பெற்றுய்ந்தோர், செல்கதிசற்குருவருளா
ற்சென்றுசேர்ந்தோர்சிவபூசைசெய்துபரமுத்திபெற்றோர், புல்
லறிவுதவிர்ந்து திருவேடமேமெய்ப் பொருளெனக்கொண்டர
னடிக்கீழ்ப்பொருந்தப்புக்கோர். (௪௭)

இ-ள். இல்லறத்திலிருந்து பெரியமுத்தியையடைந்தவர்களும் இல்லறத்திற்குரியசிற்றின்பச்செய்கையைநீக்கிஉத்தமதருமமாகிய துறவறத்திலிருந்து முத்தியடைந்தவர்களும் நல்லபிரமசாரிகளாகவேயிருந்து அருள்பெற்றுக்கரையேறினவர்களும் செல்லத்தக்ககதியை ஞானுசாரியரதுதிருவருளாலடைந்து பெற்றவர்களும் சிவபூசையைச் செய்து பரமுத்தியடைந்தவர்களும் அஞ்ஞானம் நீங்கிச்சிவவேடமேயுண்மைப்பொருளெனமனத்திற்கொண்டு சிவனடிக்கீழ்பொருந்தச்சென்றவர்களும்-என்க.

இப்படியேயடைவுபடப் பிரித்துக்கேட்டால் யாவருக்கு
மேதரிக்கச்செவிகாநீட்ட, வொப்பரியபொருடெரிந்துவிளங்
கித்தோன்றவுவமையுடைத்தாயகதைகற்கநிற்கத், தப்பில்பெரு
ங்காவியமாவிரித்துச் செய்துதருவீரென்றவர்க்கு விடைகொடு
த்துவேண்டுஞ், செப்பரியதிரவியமுங்கொடுக்கவாங்கிச் சேக்
கிழார்குரிசில்திருத்தில்லைசேர்ந்தார். (௪௮)

இ-ள். ஆகிய இவர்கள் சரித்திரத்தை இவ்வாறுகிரமமாகத் தனித்தனிகேட்கப்புகுங்கால் எல்லோருக்கும் மனதிற்றரிக்கவும் காதுகொடுத்துக் கேட்கவும் நாவினுற்பிறருக்குச் சொல்லவும் ஒப்பற்றஅப்பொருளானது விளக்கமுற்றுத் தோன்றவும் தனக்குத்தானே யுவமையுடையதாகிய இச்சரித்திரம் யாவரும் கற்றுணரவும் என்றைக்கும்நிலை நிற்கவும் குற்றமற்றபெரியகாவிய ரூபமாகவிரிவாகியற்றிக் கொடுத்தருள்வீரென் றுத்தரவுகொடுத்து அதற்குவேண்டியதிரவியமுங்கொடுக்கப் பெற்றுக்கொண்டு சேக்கிழார்சுவாமிகள் திருத்தில்லைக்கண் வந்துசேர்ந்தனர்-என்க.



அநபாய சோழமகாராஜா சேக்கிழார்சுவாமிகளுடன் யானைமேல்பவனிவந்தது.

வேறு.

தில்லையெல்லையில்வந்துவந்தெதிர்தெண்டனிட்டெழுந்தெழுந்
தல்லிசேர்கமலத்தடத்தினின்மூழ்கியம்பலவாணர்முன்
ஒல்லைசென்றுபணிந்துகைத்தலமுச்சிவைத்துளமுருகிநைந்
தெல்லைகாணரிதாயபேரொளியின்பவாரியின்மூழ்கியே. (௰௬)

இ-ள். ஸ்ரீ சிதம்பரத்தின் எல்லையைச்சேர்ந்து அஷ்டாங்கபஞ்சாங்கமாக நமஸ்கரித்தெழுந்து அகவிதழ்களையுள்ள தாமரைமலர் நிறைந்த சிவகங்கையில் ஸ்நாநஞ்செய்து நடேசமூர்த்தி சந்நிதானத்திற்கு முன் விரைவாய்ச்சென்று வணங்கி இரண்டு கைகளையுஞ்சிரசின்மேல் வைத்துக்கொண்டு மனமுருகிக்கசிந்து அளவுகாணுதற்கரிதான அகண்டதேஜோமய சிவானந்தக் கடலில்மூழ்கி-என்க.

அடையலார்புரநீறெழத் திருநகைசெய்தன்றொருமூவரைப்
படியின்மேலடிமைக்கொளும்பதபங்கயங்கள்பணிந்துநின்
றடிகளேயுனதடியார்சீரடியேனுரைத்திடவடியெடுத்
திடர்கெடத்தருவாயெனத்திருவருளையெண்ணியிறைஞ்சினர்.

இ-ள். தன்னையடையாதவர்களுடைய திரிபுரங்கள் நீறாகும்படிப்புன்னகைசெய்து அக்காலத்தில் ஒப்பற்ற அம்மூவர்களையும் நிலவுலகத்தில் அடிமைகொண்டருளிய (சிவபெருமான்) திருவடித்தாமரைகளை வணங்கிநின்று ஆண்டானே உன்னடியார்கள் சிறப்பினை அடியேன்கூறுதற்கு என்வருத்தம் நீங்கும்படி முதலடியெடுத்துத் தந்தருள்வாயென்று பரமசிவத்தின் திருவருளை நினைந்து வணங்கினர்-என்க.

அலைபுனற்பகிரதிநதிச்சடையாடவாடரவாடநின்
றிலகுமன்றினிலாடுவார்திருவருளினாலசரீரிவாக்
குலகெலாமெனவடியெடுத்துரைசெய்தபேரொலியோசைமிக்
கிலகுசீரடியார்செவிப்புலத்தெங்குமாகிநிறைந்ததால். (உக)

இ-ள். அலைகின்றசலத்தை யுடையகங்காநதி சடையினிடத்தாடவும் படத்தைவிரித்தாடுகின்ற பாம்பணிகளாடவும் நின்று பிரகாசியாநின்ற சிற்சபையினிடத்து நிருத்தஞ்செய்தருளுகின்ற நடேசமூர்த்தி திருபாகடாக்ஷத்தினால் உலகெலாமெனமுதலடி யெடுத்துக் கொடுத்தருளின் அசரீரிவாக்காகிய பேரோசையானதுஅதிகரித்து சிறப்புமிக்க அங்கங்குமிருக்கும் அடியார்கள் செவிப்புலமெங்கும் நிறைந்தது-என்க.

தில்லைமாநகர்வாழவாழ்தவசிந்தையந்தணராறைஞ்ஞூ
றல்லதும்பலமடபதித்தவராசரிக்கையிலுள்ளபேர்
எல்லையில்லவரியாவருங்களிகொளவிளங்கசரீரிவாக்
கொல்லைவந்தெழவனைவருங்கரமுச்சிவைத்துளமுருகினார். ( )

இ-ள். தில்லைக்ஷேத்திரமானது வாழும்படி நிலைபெற்றுள்ள தவச்சிந்தையுடைய மூவாயிரவர்களும் இவர்களல்லாமலும் அநேகமடபதிகளும் துறவிகளும் இன்னுமநேகம் பேர்களும் களிப்படையும்படிவெளியே எழுந்த அசரீரிவாக்கானது விரைவுடன் உண்டானபோது யாவரும் இரண்டுகைகளையு முச்சியின்மீது அஞ்சலியாகக் குவித்துக்கொண்டு மனமுருகினார்கள்-என்க.

உள்ளலார்புரநீறெழக்கணையொன்றுதொட்டுபெர்மன்றில்வாழ்
வள்ளலார்திருமாலையுந்திருநீறுமெய்ப்பரிவட்டமும்
எள்ளலாரலொன்றுசேவையர்காவலர்க்கிவையினிதளித்
தள்ளலார்வயனீடுதில்லையிலனைவருங்களிகொண்டபின். (௨௫)

இ-ள். பகைவர்புரங்கள் நீறாகும்படி ஒருகணையையேவி சிறப்புள்ள சிற்சபையினிடத்து எழுந்தருளியுள்ள நடேசமூர்த்திக்குச் சாத்தியபுட்பமாலையும் விபூதியும் உண்மையாகிய பரிவட்டமும் ஆகியவிதுகளைத் தரிப்பதற்குத்தக்கவரென்று சேக்கிழார்சுவாமிகளுக்கு இவற்றையன்புடனளித்து சேறுபொருந்தியவயல்வளமிக்க அத்தில்லையின் கண்யாவரும்களிப்பினையடைந்த பின்னர்-என்க.

சேவைகாவலர்தொண்டர்சீருரைசெய்வதற்குயர்செய்யுண்முன்
மூவரோதியதிருநெறித்தமிழாதலால்வரன்முறைமையால்
யாவரும்புகழ்திருநெறித்தலைவரைவணங்கியிணங்கிமெய்த்
தாவருஞ்சிவசாதனங்கடரித்துநீறுபரித்தரோ. (௨௬)

இ-ள். சேக்கிழார்சுவாமிகள் அடியார்களது சிறப்பையெடுத்துக் கூறுவதற்கு உயர்ந்தமுன்னூல் முற்காலத்தில் திருஞானசம்பந்தசுவாமிகள் முதலிய மூவரும் ஓதியருளிய திருநெறித்தமிழ் வேதமாதலால் வரலாற்றுமுறையே அனைவரும்துதிக்கின்ற அம்மூவரையும்வணங்கிச் சிவநேச சம்பந்தியாய் உண்மை நீங்காத விபூதிருத்திராட்சமுதலிய சிவசாதனத்தைத் தரித்துக்கொண்டு-என்க.

வந்துசூழநிரைத்தவையிருநூறுகான்மணிமண்டபத்
தெந்தையார்திருவருளையுன்னியிருந்துசேவையர்காவலர்

செந்தமிழ்த்தொடையால்விளங்கியதிருவிருத்தநிருத்தனார்
தந்தசொன்முதலாவெடுத்தனர்தாணுவானபுராணநூல். (௨௫)

இ-ள். சுற்றிலும்நிறைந்துள்ள ஆயிரக்கால் மண்டபத்தின்கண் வந்து பரமசிவத்தின் திருவருளைநினைந்து வீற்றிருந்து சேக்கிழார் சுவாமிகள் செவ்வியதமிழ்மாலையால் விளக்கமுற்ற திருவிருத்தத்தை நடேசமூர்த்தி யெடுத்துக்கொடுத்தருளின சொல்லை முதலாகக்கொண்டு சிவரூபமாகிய புராணஞ்செய்யத் தொடங்கினர்-என்க.

வேறு.

திருமறையோர் புராணமவைபதின்மூன்று சிவவேதி
யரரனைவழிபட்டபுராணமீரிரண்டு, குரைகழன்மாமாத்தி
ரரொன்றறுவர்முடிமன்னர்குறு நிலமன்னவரைவர்வணிக
ர்குலத்தைவ, ரிருமைநெறிவேளாளர்பதின்மூவரிடையரி
ருவர்சாலியர் குயவர்தயிலவினையாளர், பரதவர்சான்றோர்
வண்ணார்சிலை மறவர்நீசர் பாணரிவரோ ரொருவராம்பக
ருங்காலே. (௨௬)

இ-ள். சொல்லுமிடத்து அடியார் அறுபத்துமூவருள் வைதீக பிராமணர்களாகிய அடியார்புராணம் பதின்மூன்று பரமசிவத்திற்குத்தொண்டுசெய்து முத்திபெற்றசிவாசாரியர் புராணம்நான்கு சத்திக்கா நின்ற வீரகண்டையணிந்த மாமாத்திரனொன்னும் பிராமணகுலத்தடியவர்புராணம் ஒன்று க்ஷத்திரியவம்சத்தராகிய அடியார்புராணம் ஆறு குறுநிலமன்னவராகிய அடியார்புராணம் ஐந்துவைசியகுலத்தராகிய அடியார் புராணம்ஐந்து இம்மைமறுமைக்குரிய நல்லொழுக்கத்தையுடைய வேளாள மரபினராகிய அடியார்புராணம் பதின்மூன்று இடையாகுலத்தவராகிய அடியார் புராணம் இரண்டு சாலியர், குயவர், செக்கார், பரதவர், சான்றோர், வண்ணார், வில்லையுடையவேடர், நீசர், பாணர், ஆகிய இம்மரபினராகிய அடியார் புராணம் தனித்தனி ஒவ்வொன்று-என்க.

அறுதிபெறத்திருமரபு குறித்துரையாப்புராண மவை
களொருபதின்மூன்றுதிருக்கூட்டந்தன்னின், மறுவிலவர்
பதியறிந்தகதையிரண்டுவந்தமரபறிந்தகதையிரண்டுபேர
றிந்தகதையொன், றுறுமரபுதெரியாப் புராணமவையோ
ரே-மூரறியாக்கதையேழுபேரறியாக்கதையெட், டிறுதியி
லக்கங்கண்ட திருக்கூட்ட மொன்றெண்ணித் தனையென்
றறியாத திருக்கூட்டமெட்டே. (௨௭)

இ-ள். நிச்சயித்து மரபினைத்தெரிந்து சொல்லப்படாத அடியார்புராணம்பதின் மூன்று அடியார் கூட்டத்தில் குற்றமற்ற அவரது க்ஷேத்திரந் தெரிந்தபுராணம் இரண்டு அவர்திருவவதாரஞ்செய்த மரபுதெரிந்தபுராணம் இரண்டு அவர் திருப்பேர்தெரிந்த புராணம் ஒன்று, அவதரித்த மரபறியப்படாத அடியார் புராணம் ஏழு உளர்தெரியாத அடியார் புராணம் ஏழு அவர்கள் திருப்பேர்தெரியாத புராணம்எட்டு முடிபுத் தொகைகண்ட திருக்கூட்டத்து அடியார் புராணம் ஒன்று இவ்வளவென்று எண்ணிக்கை யறியப்படாத திருக்கூட்டத்து அடியார் புராணம் எட்டு-என்க.

தில்லைமறையோர்கலயர்முருகர்பசுபதியார்சிறப்புலியார்
கணநாதர்பூசலைசண்டேசர், கல்விநிறைசோமாசி மாறர்நமிநந்தி-கவுணியனாரப் பூதிநீலநக்கராகச், செல்வமறை
யோர்காதைபதின்மூன்றுசிவவே-தியர்காதையிரண்டுபுக
ழ்த்துணையார் முப்போதும், வல்லபடிசிவனையருச்சிப்பா
ர்கண்மாமாத் திரர்மரபிற் சிறுத்தொண்ட ரொருவர்முடி
மன்னர். (உஅ)

இ-ள். தில்லைவாழந்தணர்கள் கலயர் முருகநாயனார் பசுபதியார் சிறப்புலிநாயனார் கணநாதநாயனார் பூசல்நாயனார் சண்டேசநாயனார் ஞானமிக்கசோமாசிமாறநாயனார் நமிநந்தியடிகள் திருஞானசம்பந்தசுவாமிகள் அப்பூதியடிகள் நீலநக்கநாயனார் என்னும் செல்வமிகுந்த பிராமணகுலத்து அடியவர் புராணம் பதின்மூன்றும் புகழ்த்துணை நாயனார் தகுந்தவாறுதிரிகாலங்களிலும் பரமசிவத்தை அருச்சனைசெய்கின்ற முப்பொழுதுந்திருமேனி தீண்டுவாராகிய சிவவேதியர் புராணம் இரண்டாம் மாமாத்திரர் மரபில் திருவவதாரஞ்செய்தருளிய சிறுத்தொண்ட நாயனார் புராணம் ஒன்றும் அரசர்களாவார்-என்க.

அறுவரொவரவர்செங்கட்சோழர்புகழ்ச்சோழ - ரருண்
மானியிடங்கழியார்நெடுமாறர்சேரர், குறுநிலமன்னவ
ரைவர் நரசிங்கமுனையர் கூற்றுவனார்கழற் சிங்கர்மெய்ப்
பொருளாயடிகள், முறைமைவணிகரிலைவர்காரைக்காலம்
மைமூர்த்திகலிக்கம்பரமர்நீதியியற்பகையார், திறமைவிரி
வேளாளர்பதின்மூவர்மூர்க்கர்செருத் துணையார்வாயிலார்
கோட்புலியார்சத்தி: (உகூ)

இ-ள். அக்கிரீடந்தரித்த அரசர்ஆறுபேர்யாவரெனின்கோச்செங்கட்சோழநாயனார் புகழ்ச் சோழநாயனார் அருள்நிறைந்த மானியார்

இடங்கழிநாயனார் நின்றசீர்நெடுமாறநாயனார் சேரமான்பெருமாள் நாயனார்ஆகிய இவர்கள் புராணம் ஆறும் நரசிங்கமுனையரநாயனார் கூற்றுவநாயனார் கழற்சிங்கநாயனார் மெய்ப்பொருள்நாயனார் ஐயடிகள்காடவர்கோன் ஆகிய குறுநிலமன்னவர்புராணம் ஐந்தாம் காரைக்கால்அம்மையார் மூர்த்திநாயனார்கலிக்கம்பநாயனார் அமர்நீதிநாயனார் இயற்பகைநாயனார் ஆகியவைசியர் புராணம் ஐந்தாம் மூர்க்கநாயனார் செருத்துணைநாயனார் வாயிலா நாயனா கோட்புலி நாயனார்சத்திநாயனார்-என்க.

தாயனரிளையான்றன் குடிமாறரரசுசாக்கியர் கஞ்சாறர்
விறன்மிண்டர்முனையடுவா, ரேயர்கோன்கலிக்கர்மர்கோ
பாலர்மரபிலிருவர் திருமூலனாரானாயர்குயவர், சேயபுகழ்
த்திரு நீலகண்டனார்பாணர்திருமரபிற்றிருநீலகண்டத்து
ப்பாணர், மேயதிறலதிபத்தர்பரதவர்கண்ணப்பர் வேடர்
மரபினிற் சான்றோரேனாதிநாதர். (௩௰)

இ-ள். வேதாயனார் நாயனார் இளையான்குடிமாற நாயனார் திருநாவுக்கரசுசுவாமிகள் சாக்கியநாயனார் மானக்கஞ்சாறநாயனார் விறன்மிண்டநாயனார் முனையடுவார்நாயனார் ஏயர்கோன்கலிக்காமநாயனார் ஆகியவேளாளர் புராணம் பதின்மூன்றும் திருமூலநாயனார் ஆனாயநாயனார் எனஆயர்குலத்தவர் புராணம் இரண்டாம் செவ்விதாகிய புகழையுடைய குயவர்குலத்தவராகிய திருநீலகண்டநாயனார் திருநீலகண்டயாழ்ப்பாணர் வெற்றிபொருந்தியபரதவர் குலத்தவராகிய அதிபத்தநாயனார் வேடர்குலத்தவராகிய கண்ணப்பசுவாமிகள் சான்றோர் குலத்தவராகிய ஏனாதிநாயனார்-என்க.

நேசனார் சாலியரிற்றிருநாளைப் போவார்நீசர் மரபினி
லெங்கடிருக்குறிப்புத்தொண்டர், தூசொலிக்குமேகாலி
மரபுதிலதயிலத் தொழின்மரபிற் கலியனார்மரபு குறித்து
ரையாக், காசில்கதைபதின்மூன்று குலச்சிறையார்தண்டி
கணம்புல்லரெறிபத் தர்காரியார்குறும்பர், தேசுடையபத்
தர்பரமனைப்பாடுவார்கள் சித்தத்தைச்சிவன்பால்வைத்தா
ராரூர்ப்பிறந்தார். (௩௧)

இ-ள். சாலியகுலத்தவராகியநேசநாயனார் பஞ்சமகுலத்தவராகிய திருநாளைப்போவார் நாயனார் ஏசாலிக்குலத்தவராகிய எமது திருக்குறிப்புத்தொண்டநாயனார் செக்கார்குலத்தவராகிய கலியநாயனார் என்று இவர்கள் புராணம் தனித்தனி ஒவ்வொன்றும் மரபினைக்குறி

த்துச் சொல்லாத நல்லபுராணம் பதின்மூன்று (அவையாவன) குலச்சிறைநாயனுர் தண்டியடிகள் கணம்புல்லநாயனுர் எறிபத்தநாயனுர் காரிநாயனுர் பெருமிழலைக்குறும்பநாயனுர் ஞானப்பிரகாசராகியத்தராய்ப்பணிவார் பரமனையேபாடுவார் சித்தத்தைச் சிவன்பால்வைத்தவர்கள் திருவாரூர்ப்பிறந்தவர்கள்-என்க.

செப்பரிய பொய்யடிமையில்லாதார் மெய்யிற்றிருநீறு
பூசுமுனிவர்களுலகுதன்னி, லப்பாலுமடிச்சார்ந்தாரிவர்
கட்மிற்சிலபே-ராய்ந்த தமிழ்ப்பேர்சிலபேர் மலையாளர்சி
லபேர், தப்பாததெலுங்கர்சிலர் மற்றுளதேசத்தோர் தவ
ஞ்செய்துபரகதியை யடைந்தவர்கள்சிலபே, ரிப்போது
மிருந்தரனைவழிபடுவோர்சிலபே-ரினிமேலுந்திருமேனி
கொடுவருவோர்சிலரே. (௬௨)

இ-ள். சொல்லுதற்கரிய பொய்யடிமையில்லாதபுலவர்கள் திருமேனிமுழுதுந் திருநீறுபூசுமுனிவர்கள் இவ்வுலகத்தில் அப்பாலும் அடிச்சார்ந்தாராகிய இவர்புராணங்களாம் இவர்களுள் சிலபேர்தமிழ்நாட்டோர் சிலர்மலையாளதேயத்தோர் சிலர்தெலுங்குதேயத்தோர் சிலர் மற்றதேசத்திலுமுள்ளவர்களாம் தவத்தைச்செய்து பரமுத்தியையடைந்தவர்கள்சிலபேர் இக்காலத்திலும் இருந்து பரமசிவத்திற்குத்தொண்டுசெய்பவர்கள்சிலபேர் இனிமேலும் அவதாரஞ்செய்துவருபவர்கள் சிலபேர்களாம்-என்க.

திருஞானசம்பந்தர்திருநாவுக்கரையர்திருமூலர்நெடுமா
றர்மங்கையருக்கரசி, கரைசேருங்குலச்சிறையார் யாழ்ப்
பாணர் குறும்பர் கணநாதரப்பூதி சோமாசிமாற, ருணா
சேருமிவர்கள்பதினொருவர்குருவருளாலுயர்முத்தியடை
ந்தவர்களெறிபத்தர்கலயர், முருகனார்கண்ணப்பராஞயர்
தாயர்மூர்த்தியார் சண்டேசர்திருநாளைப்போவார். (௬௬)

இ-ள். திருஞானசம்பந்தசுவாமிகளும் திருநாவுக்கரசுசுவாமிகளுந்திருமூலநாயனுரும்நெடுமாறநாயனுரும் மங்கையர்க்கரசியாரும் முத்திக்கரைகண்ட குலச்சிறைநாயனுரும் திருநீலகண்டயாழ்ப்பாணரும்பெருமிழலைக்குறும்ப நாயனுரும் கணநாதநாயனுரும்அப்பூதியடிகளும் சோமாசிமாறநாயனுரும் புகழையுடைய பதினொருவராகிய இவர்கள்குருவருளினுல் பரமுத்தியையடைந்தவர்கள் எறிபத்தநாயனுரும் குங்கிலியக்கலயநாயனுரும் முருகநாயனுரும் கண்ணப்பசுவாமிகளும் ஆனயநாயனுரும் அரிவாட்டாயநாயனுரும் மூர்த்திநாயனுரும் சண்டேசநாயனுரும் திருநாளைப்போவார்நாயனுரும்-என்க

சேரனுர்சாக்கியனுர் கூற்றுவனுர் தண்டி-சிறப்புலியார்ப
சுபதியார்கலிக்காமர்கலியர், காரியாரதிபத்தர்நீலநக்கர்பூ
சல்-கணம்புல்லர்கோட்புலியார்நமிநந்தியடிகள், சீருடை
யகழற்சிங்கர்வாயிலரர் தூயசெருத்துணையார் புகழ்த்து
ணையார்காடவரையடிகள், மூரிநெடுவேற் செங்கட்சோழ
னுராக-முப்பதுபேர்சிவலிங்கத்தான்முத்தியடைந்தோர்.

இ-ள், சேரமான்பெருமாள் நாயனுரும் சாக்கியநாயனுரும் கூற்றுவநாயனுரும் தண்டியடிகள்நாயனுரும்சிறப்புலிநாயனுரும் பசுபதிநாயனுரும் கலிக்காமநாயனுரும் கலியநாயனுரும் காரிநாயனுரும் அதிபத்தநாயனுரும் நீலநக்கநாயனுரும் பூசல்நாயனுரும், கணம்புல்லநாயனுரும் கோட்புலிநாயனுரும் நமிநந்தியடிகள்நாயனுரும் சிறப்பினையுடைய கழற்சிங்கநாயனுரும் வாயிலார்நாயனுரும் சுத்தம்பொருந்தியசெருத்துணை நாயனுரும் புகழ்த்துணைநாயனுரும் ஐயடிகள்காடவர்கோன்நாயனுரும் வலிமையுள்ளவேலாயுதத்தையுடைய கோச்செங்கட்சோழநாயனுரும் என்று இம் முப்பதுபேர்களும் சிவலிங்கத்தால் முத்தியடைந்தவர்கள்-என்க.

திருநீலகண்டனுரியற்பகையார் மூர்க்கர்சிறுத்தொண்
டர்திருக்குறிப்புத்தொண்டர்விறன்மிண்ட, ரருள்சேருமி
டங்கழியார்முனையடுவார்சத்தி-யமர் நீதிமெய்ப்பொருளா
ரேனுதிநாதர், கரைசேரும்புகழ்ச்சோழர் கஞ்சாறர்மாறர்
காரைக்காலம்மைநரசிங்கர்கலிக்கம்பர், வருநேசராகவொ
ரு பத்தொன்பதடியார் மணிவேடத்தாரை வழிபட்டரனை
யடைந்தோர். (௫௫)

இ-ள். திருநீலகண்டநாயனுரும் இயற்பகைநாயனுரும்மூர்க்கநாயனுரும் சிறுத்தொண்டநாயனுரும் திருக்குறிப்புத்தொண்டநாயனுரும் விறன்மிண்டநாயனுரும் அருளைப்பெற்ற இடங்கழிநாயனுரும் முனையடுவார்நாயனுரும் சத்திநாயனுரும் அமர்நீதிநாயனுரும் மெய்ப்பொருள்நாயனுரும் எனுதிநாதநாயனுரும் முத்திபெற்ற புகழ்ச்சோழநாயனுரும் மானக்கஞ்சாறநாயனுரும் நின்றசீர்நெடுமாறநாயனுரும் காரைக்காலம்மையாரும் நரசிங்கமுனையநாயனுரும் கலிக்கம்பநாயனுரும் மெய்யன்புகைவந்த நேசனுர்நாயனுருமாகிய இப்பத்தொன்பது நிலைமையானபேர்களும் சிவனடியார்க்குத் தொண்டுசெய்து முத்தியடைந்தவர்கள்.

கவுணியர்நாவுக்கரசர்பேயா ரிம்மூவர்கற்கு மியலிசைவ
ல்லோரிசைத் தமிழ்நூல்வல்லோர், பவமனுகாத்திருநா

ளைப்போவாராஞயர்-பாணர்பரமனைப்பாடுவாராகநால்வர்
புவனிபுகழையடிகடிருமூலர்காரிபொய்யடிமையில்லாதத
மிழ்ப்புலவர்சேரர்-நவமுடையவிவணைவரியல்வல்லோர்நி
ன்ற-நாயன்மார்தவம்புரிந்துநற்கதியையடைந்தோர். (௩௯)

இ-ள். திருஞானசம்பந்தசுவாமிகளும் அப்பர்சுவாமிகளும்காரை க்கா லம்மையாருமாகிய இம் மூவர்கள் கற்கும்படியான இயற்றமிழிலும் இசைத்தமிழிலும் வல்லவர்களாம் பிறவித்தமோற்றத்தை யடையாததிருநாளைப் போவார்நாயனாரும் ஆனாயநாயனாரும் திருநீலகண்டயாழ்ப்பாணரும் பரமனைப்பாடுவார்களுமாகிய இந்நால்வர் இசைத்தமிழில்வல்லவர்களாம் உலகத்தார்புகழாநின்ற ஐயடிகள் காடவர்கோன்நாயனாரும் திருமூலநாயனாரும் காரிநாயனாரும் பொய்யடிமையில்லாத தமிழ்ப்புலவரும் சேரமான்பெருமாள்நாயனாருமாகிய சிறப்பையுடையஇவ்வைவர் இயற்றமிழில்வல்லவர்களாம்மற்ற நாயன்மார்கள்திருத்தொண்டுசெய்துமேலானமுத்தியையடைந்தவர்களாம்

இல்லறத்தினின்றவர்கடிருநீலகண்ட-ரியற்பகையாருள்
ளிட்டார் மூர்த்தியாரப்பர், நல்லதுறவறம் பிரமசாரிகள்ச
ண்டேசர் நானிலத்திலரனடியார் தங்களுடன் சேர்ந்து,
செல்கதி பெற்றவர்ஞானசம்பந்தருடனே திருமணத்தி
லொருமணமாய்ச்சேர்ந்தவர்களநேகர், பல்வளஞ்சேராரூ
ரருடன்சேரர்கையிற் - பரியுகைக்கவுடன்சென்றபரிசன
மெண்ணிறந்தோர். (௩௭)

இ-ள். திருநீலகண்டர்இயற்பகையார்இன்னஞ்சிலர்இல்லறத்திலிருந்து முத்தியடைந்தவர்களாம் மூர்த்திநாயனார் திருநாவுக்கரசுசுவாமிகள் நல்லதுறவறத்திலிருந்து முத்தியடைந்தவர்களாம் சண்டேசநாயனார் பிரமசரிய ஆசிரமத்திலிருந்து முத்தியடைந்தவராம் உலகத்தில் சிவனடியார்களுடன் கூடிமுத்தியடைந்தவர்கள்சிலர் அவர்கள் யாரெனில் திருஞானசம்பந்தசுவாமிகளுடைய திருமணத்தில் அவருடன்முத்தியடைந்தவர் அநேகம்பேர் பலவளப்பங்களையுள்ள நம்பியாரூரரென்னும் சுந்தரமூர்த்திசுவாமிகளுடன் சேரமான்பெருமாள்நாயனார் குதிரையேறிக்கொண்டு கயிலைக்குச்செல்ல அப்போது அவருடன் சென்றுமுத்தியடைந்தவர்கள் அளவிறந்தோர்கள்-என்க.

சிவனடியாருடன்பகையாய்முத்தியடைந்தவர்கள்-சேய்
ஞலூர்ச்சண்டேசர்பிதாவெச்சதத்தன்,கவர்புகழ்சேர்கோ
ட்புலியாருரைத்த திருவிரையாக்-கலிபிழைத்தகிளைபகை

த்து நரகினைச்சென்றடைந்தோர், தவரானமூர்த்தியாரிறை வனுக்குச்சாத்துஞ்சந்தனக்காப்பினை விலக்கியமண்சமய ச்சார்வாய்ப், புவிபுரந்தகருநடமன்னவன்முதலநேகர் பு ராணகதையினைப்பிரித்துப்புகலவெளிதலவே. (ரு அ)

இ-ள். திருச்சேய்ஞலூரில்அவதரித்தசண்டேசர்பித்தாவாகியஎச்ச தத்தனென்பவனும் பரந்தபுகழ்சேர்ந்த கோட்புலிநாயனார் சொல்லிய திருவாணையைக்கடந்த சுற்றத்தாரும் சிவனடியார்களைப்பகைத்து மு த்தியடைந்தவர்கள் தவசிரேட்டராகிய மூர்த்திநாயனார்பரமசிவத்திற் குச்சாத்துகின்ற சந்தனக்குறடுகிடையாதபடி விலக்கிச்சமண் சமயச் சார்பினனாகி யுலகத்தையாண்ட கருநாடதேசத்தரசன் முதலிய அநே கர்சிவனடியார்களைப் பகைத்து நரகத்தையடைந்தவர்கள் இவ்வாறு புராணசரித்திரத்தை அளவிட்டுச் சொல்லுதல் அரிதாம்-என்க.

ஆரூரர் திருத்தொண்டத் தொகையுரைத்தநாளி-லடித் தொண்டுசெய்தொண்டர் சிலரவர்க்குமுன்னே, பேரூர் மெய்த்தொண்டுசெய்தபேர் சிலபேரவர்க்குப்-பிறகுதிரு த்தொண்டுசெயும்பேர்சிலபேராகச்,சீரூருந்திருத்தொண் டர்புராணத்திற்சேர்த்துச்சேர்வையர்கோன்-சேவைசெயு ந்தொண்டரள விறந்தோர்,காரூருமணிகண்டர்க்கவரவர் கள்செய்த - கைத்தொண்டினிலைகளைகண்டுரைக்கவெளி தலவே. (ரு கூ)

இ-ள். சுந்தரமூர்த்திசுவாமிகள் திருத்தொண்டத்தொகையோதி யஅக்காலத்தில்திருவடித்தொண்டுசெய்துகொண்டிருந்த அடியார்கள் சிலர் சுந்தரமூர்த்திசுவாமிகள் காலத்திற்குமுன் பெருமைமிக்க உ ண்மையாகிய திருத்தொண்டுசெய்தவர்கள் சிலர்அவர்க்குப்பிற்காலத் தில்திருத்தொண்டு செய்கின்றவர்கள்சிலர் இவ்வாறாகச் சிறப்புப்பொ ருந்திய திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார் சுவாமிகள் சேர் வைசெய்த அடியார்கள் அநேகம் பேர்களாம் காளகண்டராகிய சிவ பெருமானுக்கு அந்தந்த அடியார்கள்செய்த கைத்தொண்டினது நிலை மையை அளவுகண்டுசொல்ல எளிதல்ல-என்க.

ஒருலகோவொருதிசையோவொருபதியோதம்பி-லொ ருமரபோ வொருபெயரோ வொருகாலந்தானோ, பேரு லகி லொருமை நெறிதருங்கதையோபன்மைப்-பெருங்க தையோபேரொன்றோவல்லவேயிதனை, யேருலகெலாமு ணர்ந்தோதற்கரியவன்னென் -றிறைவன்முதலடியெடுத்து

க்கொடுத்தருளக்கொண்டு, பாருலகினுமகணின் றெடுத்துக் கைநீட்டப்-பாடிமுடித்தனர் தொண்டர் சீர்பரவவல்லார். (சுயி)

இ-ள், (அத்திருத்தொண்டர்க்குரியவை) ஒருஉலகமோ,ஒருதிசையோ, ஒருபதியோ. தங்களுள் ஒருமரபோ ஒருவரோ, ஒரோகாலமோ பெரியவுலகில் ஒருமைநெறியினைக் கொடுக்கத்தக்க சரித்திரமோ பலவாகிய பெருங்கதையோ ஒருபெயரோ நாமறியோம் ஆனால் இதை மேன்மையாகிய உலகெலாமுணர்ந்தோதறகரியவனென்று பரமசிவம் முதலடியெடுத்துக் கொடுத்தருள அதைப்பெற்றுக்கொண்டு இவ்வுலகின்கண் சரஸ்வதியானவள சொற்களை யெடுத்துக்கொடுக்க அடியார்களது சிறப்பைத்துதிசெய்யவல்லவராகிய சேக்கிழார்சுவாமிகள் புராணமாகப்பாடி முடித்தனர்-என்க.

கருங்கடலைக்கைநீத்துக்கொளவெளிதுமுந்நீர்க்-கடற்கரையினுய்மணலையெண்ணியளவிடலாம், பெருங்கடன்மேல்வருந்திரையையொன் றிரண்டென்றெண்ணிப் பிரித்தெழுதிக்கடையிலக்கம் பிரித்துவிடலாகுந், தருங்கடலின்மீனையளவிடலாகும்வானத்-தாரகையையளவிடலாஞ்சங்கரன்றுடமது, சிரங்கொடிருத்தொண்டர்புராணத்தையளவிடநஞ்-சேக்கிழார்க்கெளிதலதுதேவர்க்குமரிதே.சுக

இ-ள், கருங்கடலைக்கையினுல் நீந்திக்கரையேறுதல் எளிதாம்சமுத்திரக்கரையிற் பொருந்திய நுண்ணியமணலையும் இவ்வளவென்றளவிட்டுச்சொல்லலாம் பெரியசமுத்திரத்தில் மறித்துமறித்து வருகின்ற அலைகளையும் ஒன்றிரண்டென்றெண்ணிப்பிரித்தெழுதிமொத்தத்தொகைகூட்டிச்சொல்லலாம்வளப்பங்களைக்கொடுக்கும் கடல்மீனையும் இவ்வளவென்றளவிடலாம் ஆசாயத்தின்கண் நக்ஷத்திரங்களையும் அளவிடலாகும் பரமசிவத்தின் திருவடிகளைத் தமதுசிரசில்தரித்ததிருத்தொண்டர்கள் புராணத்தை அளவிட்டுச் சொல்ல நம்முடைய சேக்கிழார்சுவாமிகளுக்குளிதன்றி,தேவர்களுக்கும்அருமையானதாகும்-என்க.

அறுபதுபேர்தனித்திருப்பேர் திருக்கூட்டமொன்ப-தாகவறுபத்தோன்பதரனடியார்கதையை, மறுவிறிருநாவலூர்ச்சிவமறையோர்குலத்து - வருசடையனார்மனைவியிசைஞானிவயிற்றி-லுறுதிபெறவவதரித்தவாரூரார்முன்னு-ளுரைசெய்த திருத்தொண்டத் தொகைப்பதிகத்தடைவே,

நறைமலிபூம் பொழில்புடைசூழ்திருநாரையூரி-னம்பியா
ண்டார்திருவந்தாதிகடைப்பிடித்து. (சஉ)

இ-ள். சிறப்புள்ள தனிப்பேர்களாகிய அறுபதுபேர்களும் திருக்கூட்டமொன்பதும் ஆக அறுபத்தொன்பதென்னும் அரனடியார்களது சரித்திரத்தைக்குற்றமில்லாத திருநாவலூர்ச்சைவவேதிய குலத்தில்வந்தசடையநாயனார் மனைவியாராகிய இசைஞானியார்வயிற்றில் இவ்வுலகினக்கண் உயிர்களுறுதிபெறும்படித்திருவவதாரஞ்செய்தருளியசுந்தரமூர்த்திசுவாமிகள்முற்காலத்தில்சொல்லிய திருத்தொண்டத்தொகையாகிய பதிகத்தின் முறைப்படிவாசனைபொருந்திய புட்பச்சோலை சூழ்ந்த திருநாரையூர் நம்பியாண்டார்நம்பிசெய்தருளிய திருவந்தாதியை ஆதாரமாகவைத்துக்கொண்டு-என்க.

காண்டமிரண்டாவகுத்துக் கதைப்பரப்பைத்தொகுத்
துக்-கருதரியசருக்கங்கள்பதின்மூன்றுநிலையிட், டெண்டு
ரைத்தபுராணத்திற்றிருவிருத்தநாலா-யிரத்திருநூற்றைம்
பத்துமூன்றுகவமைத்துச்,சேண்டகையதிருத்தொண்டர்
புராணமெனப்புராணத்-திருமுறைக்குத் திருநாமஞ்சீர்
மைபெறவமைத்திட், டாண்டகைமைபெற வெழுதிமைக்
காப்புச்சாத்தி, யழகுபெறக்கவளிகையுமமைத்ததில்வை
த்ததன்பின். (சங)

இ-ள் செய்யத்தொடங்கியபுராணத்தைஇரண்டுகாண்டங்களாகப் பிரித்துச்சரித்திரவிரிவைத்தொகுப்பாகச்செய்துநினைத்தற்கரியசருக்கங்கள்பதின்மூன்றாகவைத்து இவ்வாறியற்றினபுராணத்தைநாலாயிரத்திருநூற்றைம்பத்துமூன்றுதிருவிருத்தங்களாலநிறைத்துஇப்புராணத் திருமுறைக்குப் பெருஞ்சிறப்பினைப்பெறறதிருத்தொண்டர்புராணமெனமேன்மைபொருந்தத திருப்பெயரிட்டுநன்றாக எட்டிலெழுதிமைக் காப்புச்சாத்தி அழகுபொருந்தப் புத்தகக்கவளிகை யொன்றுசெய்து அதில் வைத்த பின்னர்-என்க.

வேறு.

சேவைகாவலர் புராணகாதைதொகை செயநினைந்தெ
மையகன்றபின், யாவர்தாமருகிருந்தபேர்கள்கதைசென்
றதெவ்வளவிருந்ததெங், காவதென்னிவைகளறியவேண்
டுமதறிந்து வாருமெனவளவர்கோ-னேவினானுரியதூதர்
தூதரறியாமலொற்றரையுமேவினான். (சச)

இ-ள். சேக்கிழார்சுவாமிகள் புராணகாவியத்தொகையினைச் செய்ய நினைத்துளம்மை விட்டுநீங்கினபின்பு அவர் அருகில்இருந்தவர்கள் யாவர் இதுவரைக்கும்புராணம்எவ்வளவாயிற்றுஎங்கேயிருந்துபுராணத்தையியற்றுகின்றனர் இனியாகவேண்டியதுயாது அவைகளைநான்தெரிந்துகொள்ளவேண்டுமாதலால் தெரிந்துவருகவென்று அநபாயசோழச்சக்கிரவர்த்தி உரிமையான தூதர்களை யேவினர் அத்தூதுவர்கள் அறியாமல் ஒற்றர்களையும் அனுப்பினர்-என்க.

வென்றிவேல்வளவனள வறிந்துவரவிட்டகாளையர்புரா
ணநூ, லொன்றுபாதிகதைசென்றதென்று சிலரோடினார்
சிலருவந்துசென், றின்றுநாளைமுடியும் புராணமினியெ
ன்றுரைத்திடவிறைஞ்சினன்'- சென்றுநற்கதைமுடிந்த
தென்றுசிலர்செம்பியற்குறுதிசெப்பினர். (சரு)

இ-ள். வெற்றிபொருந்திய வேலாயுதத்தையுடைய அநபாய சோழச் சக்கிரவர்த்தியானவர் புராணம் எவ்வளவாயிற்றென்று அறிந்துவரும்படி யேவியதூதுவருள் புராணம் பாதிசரித்திரமாயிற்றென்றுசிலர் விரைந்துவந்து சொல்லினர் சிலர்மிகுந்தசந்தோஷத்துடன் சென்று புராணம் இனி இன்றைக்குள் நாளைக்குள் முடிவுபெறுமென்றுசொல்லக்கேட்டு அத்திசையைநோக்கி வணங்கினர் அதனபின்சிலர் சென்று நன்மைபொருந்திய அப்புராணம் நிறைவேறியதென்றுசோழமகாராஜாவுக்கு உறுதியாகச்சொல்லினர்-என்க

வந்துசொன்னவர்களனைவருக்கு நவமணிகளுந்துகிலு
மம்பொனுஞ், சிந்தியள்ளியுமுவந்துவீசியுயர் செம்பொ
னம்பலமருங்கில்வா, ழந்திவண்ணர்நடமும்பணிந்துமு
தலடியெடுத்தவர்கொடுத்திடப், புந்திசெய்துமகிழ்சே
வைகாவலர் புராணமுந்தொழுவனனென. (சகூ)

இ-ள். இவ்வாறு வந்துசொல்லியதூதுவர்களுக்கெல்லாம் நவரத்தினங்களையும் நல்லவஸ்திரங்களையுஞ் சொர்ணங்களையும் மிகுந்தசந்தோஷத்துடன் எடுத்தெடுத்துக்கொடுத்து மாற்றுயர்வாகியபொன்மயமான சிற்சபையில் வீற்றிருக்கின்ற செவ்வானநிறத்தையொத்ததிருமேனியையுடையநடேசமூர்த்தியின் நடனத்தையும்வணங்கி அந்நடேசமூர்த்தி முதலடியெடுத்துக்கொடுத்தருள அதை முதலாகவைத்துக் கொண்டு பாடி மகிழ்ச்சியுற்ற சேக்கிழார்சுவாமிகளுடைய புராணத்தையும் நான்றொழுவேனென்று யத்தனித்து- என்க.

கோ. மா. ப. ஜ. சபா௳ 20 ௳ 1873 ௵ மே௴



வீதிவீதிகடோறுந் தொறும்பயணமென்று வெற்றிம
ணிமுற்சறைந், தோதிவேதியர்களெண்ணியிட்டவுயர்நா
ளுமோரையு முகூர்த்தமும், போதநாடிவரைபுரைகட்க
ளிறுபுரவிதேர்கருவியாடரச், சாதுரங்கமுடனே செலப்
பிளிறு தந்திமேல்கொடுநடந்தனன். (சஎ)

இ-ள். ஸ்ரீசிதம்பரத்திற்குப் பயணம் புறப்படவேண்டுமென்று வீதிவீதிகள்தோறும் வெற்றிபொருந்திய பெரியபேரிகைமுழக்கி நல்லகணிதசாஸ்திரிகள் தெரிந்துகணித்துச் சொல்லியசுபதினமும் லக்நமும்முகூர்த்தமும் நன்ருய்த்தெரிந்துகொண்டு மலையையொத்தமதயானை குதிரை தேர் காலாள் என்றுசொல்லும் சதுரங்கசேனைகளுந் தம்முடன்சூழவரும்படி மகாராஜா முழங்குகின்ற பட்டத்துயானைமீதேறிச்சென்றனர் என்க.

தேர்முழக்கொலிமழைக்கடக்கரட சிந்துரக்களிறுபிளி
றுசீ, ரார்முழக்கொலிபரிச்செருக்கொலிபதாதிவந்தெதிர
டர்ந்தெழும், போர்முழக்கொலிசழக்கிலாதுயர் படைக்க
லன் புணருமோசையேழ், கார்முழக்கொலியி னெட்டிர
ட்டிநிறைகடன் முழக்கெனமுழக்கெழ. (சஅ)

இ-ள். இரதத்தின் ஒலியும் மேகத்தைப்போல மதம்பொழிகின்ற சிந்தூரமெழுதிய யானைகள்கூச்சலிடுகின்ற பெரியஓசையும் குதிரைகள் அநுமானித்த மொலியும் பதாதிகள் ஒருவர்க்கொருவர் எதிரில்வந்துநெருங்கிக் கெர்ச்சிக்காநின்ற பேரொலியும் குற்றமில்லாத கூரிய ஆயுதங்கள ஒன்றுடனென்று தாக்குதலாலுண்டாகின்ற ஓசையும் சத்தமேகங்களின் ஒலியைப்பார்க்கிலும் பதினாறுபங்கு அதிகமாக நிறைந்தசமுத்திர முழக்கம்போல முழங்க- என்க.

வளவர்கோன்வரவறிந்துதில்லைமறையோரும்வண்மை
மடபதிகளும், பிளவுகொண்டமதிநுதன்மடந்தையருமற்
றுமுள்ளபெரியோர்களுங், கள்விலாதமொழிகொடு புரா
ணகதைசெய்தகங்கைகுலதிலகருந், தளவமாலையபயனை
யெதிர்ந்தினியசாரவாசிபலசாற்றினர். (சகூ)

இ-ள். (அவ்வோசையினால்) சோழமகாராஜாவரவினைத்தெரிந்து தில்லைவாழந்தணர்களும் வளப்பமிகுந்த மடாதிபதிகளும் வளைவுபொருந்திய சந்திரனையொத்த நெற்றியுள்ள மாதர்களும் இன்னுமுள்ளபெரியோர்களும்-வெளிப்பட்டஅசரீரிவாக்கைக்கொண்டுதிருத்தொண்டர்

புராணகதையையியற்றிய சேக்கிழார்சுவாமிகளும் முல்லைமலர் மாலையையுடைய அநபாய சோழச்சக்கிரவர்த்தியை யெதிர்கொண்டு இனியபயனைத்தராநின்ற ஆசிமொழிகள்பலவாகச் சொன்னார்கள்-என்க.

முண்டமானதிரு முடியுமிட்டதிருமுண்டமுங்கவசமுந்துணைக், குண்டலங்களுமிரண்டுகாதினும் வடிந்தலைந்தகுழையுந்திருக், கண்டமாலைகரமாலையுஞ்சிரசுமாலையுங்கவின்விளங்கவே, தொண்டர்சீர் பரவுவானணைந்த சுபசரிதைசோழனெதிர்கண்டனன். (௫௰)

இ-ள். முண்டிதமாகிய திருமுடியும் திரிபுண்டரமாகத் தரித்தவிபூதியும் உருத்திராட்சங்களும் இணையாகியகுண்டலமும் இரண்டுகாதினிடத்துந் தொங்கியசைந்துகொண் டிராநின்ற கண்டிகையும் கழுத்திலணியும் உருத்திராக்ஷகண்டிகையும் கரத்தின்கண்ஜெபமாலையும் சிரத்தின் மாலையும் அழகுபொருந்த திருத்தொண்டர்புராணத்தை நிறைவேற்றிய சேக்கிழார்சுவாமிகள் வந்தருளிய சுபசரித்திரத்தைச் சோழமகாராஜாகண்ணினால்எதிராகக் கண்டனர்-என்க.

கண்டபோதுளமகிழ்ந்து தன்னையறியாது கைகடலைமீதுறக், கொண்டவேட மரனடியர்வேடமிது குறைவிலாததவவேடமென், றண்டவாணர்திருவருளை யுன்னியவரடிமைகொண்டபெருமையைநினைந், தெண்டயங்கரசரேறு சேவையர் குலாதிபாதுகையிறைஞ்சினான். (௫௧)

இ-ள். கண்டவுடன் உள்ளமகிழ்ந்து தன்னையறியாமலே இரண்டு கைகளும் அஞ்சலியாகச் சிரசின்மீதுபொருந்த இவர்கொண்டிருக்கும் வேடம்சிவனடியார் வேடமே மேலும் இதுகுறைவில்லாததவவேடமேஎன்று தேவதேவனாகிய பரமசிவத்தின் கிருபையைநினைந்து அவ்வவர்அடிமையாகக்கொண்ட பெருமையைச்சிந்தித்து யாவரொண்ணத்தும் விற்றிருக்கும் அரசராகியயானைகளுக்கு ஆண்சிங்கத்தையொத்த அநபாய சோழச்சக்கிரவர்த்தியானவர் சேக்கிழார்சுவாமிகளது திருவடிப்பாதுகையில் வணங்கினர்-என்க.

இறைஞ்சியம்பலவர் பாததாமரையிறைஞ்ச வெண்ணிவரன்முறைமையா, லறஞ்சிறந்தமுனிசேவைகாவலருமாறைஞ்ஞூறுமறையோர்களுந், துறஞ்சிறந்தமடபதிகளுந்தொட்ரவந்துமன்னனரிபிரமர்பான், மறைஞ்சுநின்றபொருள்வெளிப்படக்கனகமன்றினின்றபடிகண்டனன். (௫௨)

இ-ள். வணங்கிக்கொண்டு நடேசமூர்த்தி திருவடித்தாமரைகளை வணங்கநினைந்து வரன்முறையாக சிவதருமத்தில் மிகுந்த முனிசிரேஷ்டராகிய சேக்கிழார்சுவாமிகளுந் தில்லைவாழந்தணர் மூவாயிரவர்களுந் துறவறத்திற்சிறந்த மடாதிபதிகளும் தம்மைத் தொடர்ந்துவரச்சோழராஜாபிரமவிஷ்ணுக்களிடத்தில் மறைந்திருக்கின்ற பரம்பொருளானது வெளியாகச் சிற்சபையில் நிர்த்தனஞ்செய்து நின்றருளுந் திருக்கோலத்தைத் தெரிசித்தனர்-என்க.

கண்டகண்ணரு விதாரைகொள்ள விருகைகளஞ் சலிகொளக்கசிந், தெண்டரும்புளகரோமகூபமெழவின்பவாரிகரைபுரளவாய், விண்டதூமொழிகள்குழறவன்பினொடு விம்மிவிம்மியருண்மேலிடத், தெண்டனுகமுன்விழுந்தெழுந்துநனிசெம்பியன்பரவவெம்பிரான். (ருங)

இ-ள். தெரிசித்த கண்ணனது அருவித்தாரை பொழியவும் இருகைகளும் அஞ்சலிகொள்ளவும் மனமுருகி எண்ணத்தக்கபுளகாங்கிதமாகமயிர் சிலிர்க்கவும் ஆனந்தக்கடலானது கரைபுரளவும் வாக்கினிடத்திலுண்டாகின்றசொற்கள்குழறவும் அன்புடனே யதிக விம்மிதமடைந்துதிருவருள்மேலீடாய் அஷ்டாங்கபஞ்சாங்கமாக நமஸ்கரித்து எழுந்திருந்து மிகுதியாகச் சோழராஜா தோத்திரஞ் செய்ய எமதுபிரானுகிய நடேசர்-என்க.

சேக்கிழானமதுதொண்டர்சீர்பரவநாமகிழ்ந்துலகமென்றுநம், வாக்கினலடியெடுத் துரைத்திடவ ரைந்துநூல்செய்துமுடித்தனன், காக்கும்வேல் வளவநீயிதைக்கடிதுகேளெனக் கனகவெளியிலே, யூக்கமானதிருவாக்கெழுந்ததுதிருச்சிலம்பொலியுமுடனெழ. (ருச)

இ-ள். உலகுயிர்களைக்காக்கும்வேலாயுதத்தையுடையசோழராஜனே சேக்கிழான் நமதுஅடியார்கள் சிறப்பைபத்துதிசெய்ய நாம்மகிழ்வுற்று நமதுவாக்கினுல் உலகமென்று முதலடியெடுத்துக் கொடுக்கக்கொண்டு புராணஞ்செய்து நிறைவேற்றினன் அதைநீவிரைவிற்கேட்கவென்று கனகசபையின்கண் யாவரும்மகிழும்படியான் உறுதியுள்ள ஒருஅசரீரிவாக்கு உண்டாயிற்று அவ்வோசையுடன் நடனச்சிலம்பினேசையுங்கூட வுண்டாக-என்க.

மன்றுளாடிதிருவாய்மலர்ந்த மொழியுஞ்சிலம்பொலியுமன்றிலே, நின்றமானிடர்செவிப்புலன்புக நிறைந்ததன்றி

யுகிலத்தின்மே, லொன்றிநின்றுயர்சராசரங்களடையக்கசி
ந்துருகியோலிடக், குன்றிலங்குதிரடோண ரேந்திரபதி
குதுகுதுத்துளமகிழ்ந்தனன். (ருரு)

இ-ள். நடேசமூர்த்தி திருவாய்மலர்ந்தருளிய அசரீரிவாக்கும் திருச்சிலம்பி ஞதமும் சிற்சபையின்கண்நின்றிருந்த அடியார்களுடையகாதுகளில்கேட்கநிறைந்ததல்லாமலும் இவ்வுலகத்தின்கண்பொருந்திநின்ற உயர்ந்த சராசரங்களெல்லாம் மனம்நெக்குவிட்டுருகியாரவாரிக்க மலைபோற்றிரண்ட புயங்களை யுடையசோழமகாராஜாவும் குதூகலங்கொண்டுள்ளம் மகிழ்ச்சியடைந்தனர்-என்க.

தொண்டர்தொண்டுசெய் புராணகாதைமதிசூடுநாதர்தி
ருவருளினல், விண்டநீதி புனைசேக்கிழார் முனிவிரித்து
ரைத்தகதைகேட்பதற், கண்டவாணரடியாரெலாங்கடுகவ
ருகவென்றுதிசைதிசைதொறு, மெண்டயங்கரசனேடெ
டுத்தெழுதியாளுமோலைகளுமேவினன். (ருசு)

இ-ள். மநுச்சக்கிரவர்த்தியினல் சொல்லியநீதியைத் தெரிந்த சேக்கிழார் சுவாமிகள்நடேசமூர்த்தியின் திருவருளினல் விரிவாகச் சொல்லிய திருத்தொண்டர்புராணத்தைக் கேட்பதற்குச் சிவனடியார்கள்யாவரும் விரைவாய்வரக்கடவர்கள் என்று வானுலகத்திலுந் தன்கீர்த்தியைச்செலுத்திய சோழமகாராஜா திக்குகள்தோறும் திருமுகமெழுதி அத்துடன் தூதுவர்களையும் அனுப்பினர்-என்க.

வேறு.

கவசமணிந்தசனங்களுமிங்கிதமுங்கம்பித்
தவசமுறுஞ்சிவசிந்தையுமன்பகலாமேன்மைத்
தவசரிதத்தொழிலுஞ்சிவசாதனமுஞ்சாரச்
சிவசமயத்தவர்யாவரும்வந்துதிரண்டார்கள். (ருஎ)

இ-ள். விபூதி யுருத்திராட்சமாகிய கவசத்தை யணிந்தஅடியார்களும் இங்கிதமும் யாக்கைவிம்மிதங்கொண்டு பரவசமடையும்படியானசிவசிந்தையினையும் அன்புநீங்காத மேன்மையினையும் உடையசிவனடிமைத்தொண்டும் காஷாயமுஞ்சடைமுடியும் பொருந்தும்படி சிவநேசராகிய அடியார்கள்யாவரும் வந்து கூடினர்-என்க.

வேதியர்வேதமுழக்கொலிவேதத்தைத்தமிழா
லோதியமூவர்திருப்பதிகத்தொலியோவாமற்

பூதியணிந்தாகரவெனவன்பர்புகழ்ந்தோதுங்
காதியல்பேரொலிகாரொலிபோலொலிகைத்தேற. (ருஅ)

இ-ள். பிராமணர்களுடைய வேதவொலியும் அந்தவேதத்தைத் தமிழாற்கூறிய மூவர்களுடைய தேவாரத்தினொலியும் விபூதியையணிந்து அடியார்கள் அரகரவென்று நீங்காமல் துதிசெய்து புகழும்படியான செவிக்குப்பொருந்திய பெரியவொலியும் மேகத்தினொலிபோலொலித்து அதையும் அடக்கி மேலிட-என்க.

பூசிப்பவர்சிலர்பூசித்தன்பொடுபுனிதன்று
ணேசிப்பவர்சிலர்பிறவாவரமருணிமலாவென்
றியாசிப்பவர்சிலர்திருமுறையெழுதிக்களிகூர
வாசிப்பவர்சிலராகவிருந்துமகிழ்ந்தார்கள். (ருகூ)

இ-ள். சிவபூசைசெய்கின்றவர்கள் சிலபேரும் அவ்வாறுபூசைசெய்துநடேசர்திருவடிகளைத்தியானஞ்செய்கின்றவர்கள்சிலபேரும் நடேசமூர்த்தியே அடியோம் இறந்து பிறவாவரம் அருளென்று ஏற்கின்றவர்கள்சிலபேரும் புராணத்திருமுறையையெழுதி விருப்பமுற வாசிக்கின்றவர்கள் சிலருமாக இருந்து மகிழ்ச்சியடைந்தார்கள்-என்க.

தெள்ளுதிரைக்கடன்மீதுமிதந்ததிருத்தோணி
வள்ளலையன்புசெயன்பர்மடங்கடொறும்பாலர்
மெள்ளவிருந்துமிழற்றுபுராணவிருத்தத்தைக்
கிள்ளைகள்பாடியுரைப்பனகேட்பனமெய்ப்பூவை. (சுய)

இ-ள். தெள்ளிய அலையோடுங்கூடிய சமுத்திரத்தில் ஊழிகாலந்தோறு மிதந்த தோணிபுரத்தில் திருவவதாரஞ்செய்த சம்பந்தசுவாமிகளுக்கு அன்பினைச்செய்கின்ற அடியவர்கள்மடங்கடோறும் சிறுபிள்ளைகள் அமைவாகவாசிக்கின்ற புராணவிருத்தத்தைக் கிளிப்பிள்ளைகளும்சுற்றுக்கொண்டு பாடிப்பொருள்சொல்வன. அதைநாகணவாய்ப்புட்கள் கேட்பன-என்க. உம்மைதொக்கின்றது.

மற்றதுகண்டுகளித்தநலத்தமனத்தோடு
சுற்றியமந்திரிமாரொடுதந்திரிமார்சூழத்
தெற்றெனவந்துதிரண்டுமுரண்டருசீர்நாடு
பெற்றதுசெல்வமெனத்தனியோகைபெருத்தார்கள். (சுக)

இ-ள். அதைக்கண்டுகளிப்பையடைந்தநன்மையுள்ளவுள்ளத்தோடுஞ்சேர்ந்திருக்கிற மந்திரிகளும் சேனாதிபதிகளும்சூழ விரைவில்வந்

துகூட்டங்கொண்டு காவலையுடைய நிலையுள்ளஇவ்வுலகமானது மகதைசுவரியத்தைப்பெற்றதென்று பேரானந்தப்பெருக்கமுற்றனர்- என்க.

பாடினர்தும்புருநாரதர்நீடிசைபாடாநின்
றாடினர்வானிலரம்பையரஞ்சலியெஞ்சாமற்
சூடினர்மண்ணின்மடந்தையரெந்தைதுணைப்பாதந்
தேடினர்மாலயனன்பர்நடந்தரிசித்தார்கள். (௬௨)

இ-ள். தும்புருநாரதர் கானம் பாடினார்கள், விண்ணில் அரம்பையர் இசைபாடிக்கொண்டு ஆடினார்கள், பூவுலகமாதர்கள் குறைபாடின்றிக்கரங்களைச்சிரசின்மேல் குவித்துத்தொழுதார்கள், எமதுபிரானாகிய நடேசமூர்த்தியின் இரண்டுதிருவடிகளையும் மாலுமயனுந்தேடினார்கள். அடியார்கள்நடனதெரிசனஞ்செய்தார்கள்- என்க.

சங்கொடுபேரிகறங்கிசைவீணைதனித்தாளம்
வங்கியகாளமிடக்கைகடக்கைமணிக்காளம்
பொங்கியபம்பைவலம்புரிகண்டைமுதற்பொற்பார்
மங்கலதூரியமெங்குமுழங்கிவனப்பெய்த (௬௩)

இ-ள். சங்குகள் பேரிகைகள் சப்திக்காநின்றவீணைகள் ஒப்பற்ற தாளங்கள் வேய்ங்குழல்கள்சொம்புகள் எக்காளங்கள் அழகிய தக்கைகள் திருச்சின்னங்கள் ஒலிக்காநின்ற பம்பைகள் வலம்புரிச்சங்கங்கள் கைம்மணிகள் இவைமுதலாகிய அழகுநிறைந்த மங்கலவாத்தியங்கள் எங்கும்சத்தித்துச் சிறப்பெய்தவும்- என்க.

வேதியர்வேள்விநெடும்புகையாலயமெங்கெங்குங்
காதியகுங்குலியப்புகைநீடுகருப்பாலைச்
சோதிநெடும்புகைதோரணவீதிதொறுந்தோறு
மாதர்புகைக்குமகிற்புகையெங்கும்வனப்பெய்த. (௬௪)

இ-ள். பிராமணர்புரிகின்ற யாகத்திலுண்டாகிற மிகுந்த புகையுந்தேவாலயங்கள்தோறும் அடியவர்கள் இடுங்குங்கிலியப்புகையும் நீண்டகருப்பஞ்சாற்றைக் காச்சுதலா லுண்டாகின்ற ஒளிமிகுந்தபுகையும்தோரணங்கள் கட்டிய வீதிகள்தோறும்மாதர்கள் ஊட்டுகின்றஅகிற்புகையும் - எங்கும்பரிமளிக்கவும்- என்க.

ஆட்கநாட்கசாலைகண்முத்தணியத்தாணி
மேடையரங்குகளங்கமிலாதவெளிக்கூட

மாட்மதிட்கனமாளிகைசூளிகையெங்கெங்குந்
தோட்விழ்மாலைகள்பொன்னரிமாலைகள்சூழ்வித்தார். (சுரு)

இ-ள். பொன்னுலாகிய நாடகசாலைகளிலும் முத்துக்களால் அலங்கரித்திருக்கும் பெரியமண்டபங்களிலும் மேடைகளிலும் சபைகளிலும் குற்றமில்லாத நிலாமுற்றங்களிலும் வீடுகளிலும் மதில்களையுடைய பெரிய மாளிகைகளிலும் அவற்றின்சிகரங்களிலும்மற்ற எல்லாவிடங்களிலும் இதழ்களுடன் மலர்ந்தபுஷ்பமாலைகளையும் பொன்னரிமாலைகளையும் அலங்காரஞ்செய்தார்கள்-என்க.

பழுதகலத்திருவலகுவிருப்பொடுபணிமாறிக்
குழைவுபெறத்திகழ்கோமயநீர்குளிரச்செய்து
தழைபொதிதோரணமுங்கொடியுந்துகிலுஞ்சார்வித்
தழகுபெறத்திருவீதிபுதுக்கியதன்பின்பு. (சுசு)

இ-ள். குற்றநீங்கவிருப்பத்துடனே திருவலகிட்டுகுழம்பாசச் சாணத்தையுங்கோசலத்தையுங்கரைத்துத்தெளித்துத்தழைநெருங்கிய புஷ்பத்தோரணங்களுங் கொடிகளும் மேல்விதானங்களும் அலங்கரித்துஅழகுபொருந்த வீதிகளை அலங்காரஞ்செய்து அதன்பின்பு-என்க.

வேறு.

திருநெறித்தமிழ்வல்லபேர்கள்சிவாகமங்கள்படித்தபேர்
கருநெறிப்பகைஞானநூல்பலகற்றபேர்மறைகற்றபேர்
குருநெறிக்குரியோரிலக்கணலக்கியங்கள்குறித்தபேர்
பெருநெறிப்பலகாவியங்கதைபேசவல்லவரனைவரும். (சுஎ)

இ-ள். திருநெறித்தமிழில் வல்லவர்களுஞ் சிவாகமங்களைப்படித்தவர்களும் செனனம்வருவழிக்குப்பகையாகிய பலஞானசாஸ்திரங்களைக்கற்றபேர்களும் வேதபண்டிதர்களும் போதகாசாரியர்களும் இலக்கண இலக்கியங்களைக்கற்றபேர்களும் நன்னெறியையுடையபலபுராணங்களைப் பேசவல்லவர்களும் ஆகியஇவர்களெல்லாரும்-என்க.

வேறு.

வள்ளலார்திருநடனஞ்செய் மன்றின்முன்றின் மறையவர்கோமயசலத்தான்மெழுகித்தாபித், தெள்ளரும்வெண்சுதையொழுக்கியறுகாற்பீட மிட்டதன்மேற்பசும்பட்டுவிரித்துமீதே, வெள்ளைமடித்திட்டுமதுமலருந்தூவி விரைநறுந்தூபங்கொடுத்தாதனங்கற்பித்துத், தெள்ளுதமிழ்ச்

சேக்கிழார்புராணஞ்செய்த திருமுறையையதன்மேல்வை
த்திறைஞ்சிப்போற்றி. (சுஅ)

இ-ள். நடேசமூர்த்தி நடனஞ்செய்கின்ற சிற்சபைக்குமுன்னே தி ல்லையந்தணர்கள் கோமயசலத்தால் மெழுக்கிட்டு விநோதமானகோல மிட்டு அறுகாற்பீடமமைத்து அதன்மேல் பசும்பட்டுவிரித்து அதன்மீ துவெள்ளைவஸ்திரம்மடித்துத்தரித்துத் தேனிறைந்த புஷ்பங்களையும் பரப்பி மணம்பொருந்திய நல்ல தூபதீபாராதனைகள் செய்து இவ்வா ருகஆசனமேற்படுத்தி தெள்ளியதமிழில்வல்ல சேக்கிழார்சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய புராணத்திருமுறையை அதன்மேல்வைத்து வணங்கித்துதித்து- என்க.

வாழிதிருத்தொண்டர்புராணத்தைநீரேவாசித்துப்பொ
ருளருளிச்செய்வீரென்று, சோழர்பெருமான்முதலாமடி
யரெல்லாஞ் சொலக்கேட்டுக்குன்றைமுனிமன்றுளாடுந்,
தாழ்சடையானடியெடுத்துத்தரத்தாஞ்செய்த சைவகதை
யினைவிளங்கவிரித்துச்சொல்லச், சூழவிருந்தம்பலவரடி
யாரெல்லாஞ் சுருதிமொழியிதுவெனக்கைதொழுதுகே
ட்டார். (சுகூ)

இ-ள். திருத்தொண்டர்புராணமாகிய இதைத் தேவரீரேவாசித் துப் பொருளருளிச்செய்வீரென்று சோழராசன் முதலாகிய அடிய வர்களெல்லாம்பிரார்த்திக்க அதனைஏற்றுச் சேக்கிழார்சுவாமிகள் சிற்ச பையினிடத்து நிர்த்தனஞ்செய்கின்ற தாழ்ந்தசடையையுடைய நடே சமூர்த்தி முதலடியெடுத்துக் கொடுக்கத்தாம் செய்ததிருத்தொண்டர் சரித்திரத்தை யாவருக்குந் தெரியும்படி விரிவாகப் பொருளருளிச் செய்ய நடேசமூர்த்தியின் அடியார்களெல்லாரும் இதுவே வேதவா க்கியமென்று அஞ்சலியாகக்கைகூப்பிச்சிரவணஞ்செய்தார்கள்.என்க

தாளுடையதிருச்சிலம்புபுலம்பநடம்புரியுந் தன்மையர
னுக்கிசைந்தபேர்வழியினாளும், ஆளுடையபிள்ளையாரவ
தரித்தநாளு மவரமுது திருஞானமமுதுசெய்தநாளுஞ்,
சூளுடையாதிரைநாளாஞ்சித்திரையாதிரைநாட்-டொடங்
கியெதிராமாண்டுசித்திரையாதிரையி,னாளுடையகதைமு
டிப்பமெனக்குன்றைவேந்தர் நடத்தவனைவருமிருந்துகே
ட்டனர்நாடோறும். (எ0)

இ-ள். திருவடிகளிற்பொருந்திய சிலம்பானது சத்திக்க நடன ஞ்செய்யும் நடேசமூர்த்தியின் திருநாமத்துக்குரித்தாகிய நக்ஷத்திர

மும், திருஞானசம்பந்தசுவாமிகள் திருவவதாரஞ்செய்த திருநக்ஷத்திரமும், அவர் அமுதி ஞானப்பால் உண்டருளிய திருநக்ஷத்திரமும் உறுதிபொருந்திய திருவாதிரைநக்ஷத்திரமாம் - ஆதலால்நிகழுஞ்சித்திரைமாதம் திருவாதிரை நக்ஷத்திரந்தொடங்கி மறுவருடம் சித்திரைமாதம் திருவாதிரைநக்ஷத்திரத்தில்இப்புராணத்தை நிறைவேற்றுவேமென்று சேக்கிழார்சுவாமிகள்-புராணத்தை அரங்கேற்றல்செய்ய அடியார்கள்யாவரும் மிகுந்தபத்தியுடனிருந்து நாடோறுங்கேட்டுக்கொண்டுவந்தனர்-என்க.

சிறப்புடையமூவர்முதலிகடிருவாய்மலர்ந்த- திருநெறி,
யிதமிழ்மூலர்திருமந்திரமாலை, யறப்பயனுங்காரைக்காற்
பேயிரட்டைமாலை- யந்தாதிமூத்தபதிகங்கழறிற்றறிவார்,
மறப்பரியபொன்வண்ணத்தந்தாதிதிருமும்- மணிக்கோ
வைதெய்வவுலாவையடிகள்வெண்பா, வுறுப்பாகத்திருவி
ருத்தமுடலாகப்பொருட்கோ- ளுயிராகநாலடியானடந்த
துலகெல்லாம். (எக)

இ-ள். புகழையுடையதிருஞானசம்பந்தசுவாமிகள் முதலியமூவர்முதலிகள் திருவாய்மலர்ந்தருளிய திருநெறித்தமிழ்வேதமாகிய திருமுறைகள் ஏழும், திருமூலர் திருமந்திரமாலையொன்றுந் தருமப்பயனாகிய காரைக்கால்அம்மையார் அருளிச்செய்த இரட்டைமணி மாலையொன்றும் அற்புதத்திருவந்தாதியொன்றும் மூத்ததிருப்பதிகம் இரண்டும் ஆகநான்குபிரபந்தமும் சேரமான்பெருமான்நாயனார்திருவாய்மலர்ந்தருளிய பொன்வண்ணத்தந்தாதியொனறும் திருவாரூர்மும்மணிக்கோவையொன்றும் ஆதியுலாவொன்றும் ஆகியமூன்றுபிரபந்தமும் ஐயடிகள்காடவர்கோன் திருவாய்மலர்ந்தருளிய முத்தித்திருவெண்பாவென்னும் பிரபந்தம்ஒன்றும் ஆகியஇவைகள் அவயவங்களாகவும் விருத்தங்கள்சரீரமாகவும் பொருள்கோள் ஆத்மாவாகவும்நாலடியால் இவ்வுலகமெல்லாம் நடந்தது-என்க.

அன்றுமுதனுடோறுநாடோறுமண்ணலடியரளவிறந்த
பெயர்வந்தவர்களெல்லாஞ், சென்றுறையத்திருமடங்க
ழிருமடங்கடோறுந் திருவிளக்கங்கவர்சாத்தவுன்னுடை
மேற்போர்வை, துன்றியசெந்நெலினடிசில்கன்னனறுங்க
னிகடுயவறுசுவைக்கறிநெய்தயிர்திரண்டபாறே, னன்று
திருப்பண்ணியந்தண்ணீரமுதமடைக்காய் நரபதியேவலி
னமைச்சர்நாடோறுநடத்த. (எஉ)

இ-ள். அன்றுமுதல் நாள்தோறும் நாள்தோறும் புராணங்கேட்கவந்த அளவிறந்த சிவனடியார்களெல்லாம் இருப்பதற்குமடங்களும் அம்மடங்கள்தோறும் விளக்குகளும் அவர்கள்தரித்துக்கொள்ள உள்ளுடையும்போர்த்துக்கொள்ளப் போர்வைகளும்- பொருந்திய சம்பா நெல்லரிசிச்சாதங்களும்கறகண்டுஇனியபழவர்க்கம்பரிசுத்தமாகிய ஷட்ரஸங்களோடுங்கூடிய பதார்த்தம் நெய் கட்டித்தயிர் திரட்டுப்பால் தேன் நல்லபணிகாரவர்க்கங்களும் தண்ணீரமுதும் முகவாசனையோடுங் கூடிய தாம்பூலமும் ஆகியஇவைகளையெல்லாம் சோழமகாராஜா உத்தரவினால் மந்திரிகள்நாடோறும் நடத்திக்கொண்டுவர-என்க.

நலமலியுந்திருத்தில்லைமன்றினினின்றுநடராசற்கன்றுமுதன்மகபூசைநடத்தி,யலகில்புகழ்த்தில்லைவாழந்தணர்க்கும்வெவ்வே- றமுதுபடிகறியமுதுமுதலானவெல்லா, நலமலிசெங்கோல்வளவன்றப்பாமேநாளு நடத்திவரவரனடியார்நிறைந்துபதஞ்சலியும்,புலிமுனியுந்தவஞ்செய்த பெரும்பற்றப்புலியூர்பூலோகசிவலோக மெனப்பொலிந்துதோன்ற. (எ௩)

இ-ள். நன்மைமிகுந்த தில்லையிற்பொருந்திய சிற்சபையினிடத்துஆநந்தநிர்த்தனஞ்செய்யும் நடேசமூர்த்திக்கு அன்றுமுதல் மகாபூசைகளைநடத்தி அளவில்லாத புகழையுடைய தில்லைவாழந்தணர்களுக்கும் வெவ்வேறாகஅமுதுபடி கறிகள் முதலாகியவைகளை யெல்லாம் மேன்மைபொருந்திய செங்கோலையுடைய சோழமகாராஜாதவறுமல் நாடோறும்நடத்திக்கொண்டுவர சிவனடியார்கள் நிறைந்து பதஞ்சலிவ்யாக்கிரபாத முனிவர்கள் தவஞ்செய்த பெரும்பற்றப்புலியூரென்னும் ஸ்ரீ சிதம்பரமானது பூலோகசிவலோகமென்று சொல்லும்படிப் பிரகாசிக்க-என்க.

மருவுதிருமுறைசேர்ப்பாரெழுதுவாரிருந்து-வாசிப்பார்பொருளுணாப்பார்கேட்டிருப்பார்மகிழ்ந்து, சிரமசைத்துக்கொண்டாடிக்குதுகுதுப்பார்சிரிப்பார்- தேனிப்பார்குன்றைமுனிச் சேக்கிழார்செய்த, வரியதவத்தினைநினைப்பா ரம்பலவர்முன்ன ளடியெடுத்துக் கொடுக்கவிவர்பாடினரென்றுணாப்பார், பெரியபுராணங்கேட்டவளவர்பிரான்செவிக்குப் - பிடிக்குமோவினிச்சிந்தாமணிப்புரட்டென்றுணாப்பார். (எ௪)

இ-ள். பொருந்திய திருமுறையெழுதப்புத்தகம்சேர்ப்பவர்களும் எழுதுபவர்களும் இருந்து வாசிப்பவர்களும் அதற்குப்பொருள்சொல்

வார்களும் களிப்படைந்து கேட்டுக்கொண்டிருப்பவர்களும் சிரக்கம்பனஞ்செய்து கொண்டாடி மகிழ்ச்சியடைபவர்களும் ஆநந்தத்தினால் நகைகொள்பவர்களும் இனிப்புக்கொள்பவர்களும் சேக்கிழார்சுவாமிகள் செய்தருளிய அருமையாகியதவத்தைக்குறித்துப் பெரிதாகக்கருதுவார்களும் நடேசமூர்த்திமுன்னாள் முதலடியெடுத்துக் கொடுக்க சேக்கிழார்சுவாமிகள் பாடிமுடித்தனவொன்றுபுகழ்பவர்களும்இந்தபெரியபுராணத்தைக்கேட்ட சோழமகாராஜாசெவிக்கு இனிசிந்தாமணியாகிய வெறுங்கதையேற்குமோவென்று சொல்பவர்களும்-என்க.

இத்தகையசிறப்புடனேதிருத்தொண்டர்புராண மிருந்தன்பர்பாராட்டநடந்தெதிராமாண்டு, சித்திரையாதிரைநாளின்முடியவதுகண்டு திருத்தொண்டரரவெனும்பேரொலியெழுந்துபொங்கக்;கத்துதிரைக்கடலொலியைவிழுங்கிமுழங்கோரோழ் – கடலொலியைக் கீழ்ப்படுத்திப் பிரமாண்டவெளியைப், பொத்தியிமையவர்செவியை நிறைத்துயரப்பொங்கிப் – பொன்னுலகுக்கப்பாலும் புகப்பொலிந்ததன்றே (௭௫)

இ-ள். இத்தன்மையாகிய சிறப்புடனே திருத்தொண்டர்புராணத்தை அன்பர்களிருந்து பாராட்டுதல்செய்ய அதுநடந்து மறுவருடம்சித்திரைமாதம் திருவாதிரைநக்ஷத்திரத்தில் நிறைவேற அதனையறிந்துசிவனடியார்கள்துதிக்கும் அரகரவென்னும் பேரோசையானது மேலோங்கி அதிகரித்து ஒலிக்காநின்றஅலையையுடையகடலின்ஒலியையடக்கி சத்திக்கின்றபெரும்புறக்கடலின் ஒலியையுமடக்கிப்பிரமாண்டவெளியைமூடித் தேவர்கள்செவியை நிறைத்துமேலேயெழுந்துதேவலோகத்துக்கப்பாலும்போயூடுருவிப்பொலிந்தது-என்க.

திருத்தொண்டர்புராணமெழுதிய முறையைமறையோர் – சிவமூலமந்திரத்தாலருச்சனைசெய்திறைஞ்சி,யிருக்குமுதன்மறைநான்கினின்றுமுதலாக– விதுவுமொருதமிழ்வேதமைந்தாவதென்று, கருத்திருத்தியமுதடைக் காய்நறுந்தூபதீபங்– கவரிகுடைகண்ணாடியாலத்திநீறு, பரித்தளவுசெயக்கண்டுவளவர்பிரான்முறையைப்– பசும்பட்டினாற் சூழ்ந்துபொற்கலத்திலிருத்தி. (௭௬)

இ-ள். திருத்தொண்டர்புராணத்தை யெழுதிய திருமுறையைத் தில்லைவாழந்தணர்கள் மூலபஞ்சாக்ஷரத்தால் அருச்சனைசெய்துவணங்கிஇருக்குமுதலாகிய நான்குவேதங்களுடன் இன்றுமுதல்இதுவும்

ஐந்தாவது தமிழ்வேதமென்று ஆவாகித்து பால் தாம்பூலம் நல்லதூ பதீபங்கள் சாமரைகுடைகண்ணாடி ஆலத்திவிபூதி முதலிய அஷ்டம ங்கலங்களால் தேவஉபசாரஞ்செய்ய அதனைநோக்கித் தெரிசித்துச் சோழமகாராஜா திருமுறையைப் பொற்பட்டினாற்சூழ்வித்துப் பொற் றட்டில்வைத்து-என்க.


செறிமதயானைச்சிரத்திற்பொற்கலத்தோடெடுத்துத்- தி
ருமுறையையிருத்தியபின்சேவையர்காவலரை,முறைமை
பெறவேற்றியரசனுங்கூடவேறி- முறைமையினுலிணைக்க
வரிதுணைக்கரத்தால்வீச, மறைமுழங்கவிண்ணவர்கள்கற்
பகப்பூமாரி- மழைபொழியத்திருவீதிவலமாகவரும்போ,
திறைவர்திருவருளை நினைந்தடலரசர்கோமானிதுவன்றோ
நான்செய்ததவப்பயனென்றிசைத்தான். (எஎ)

இ-ள். மதத்தையுடையபட்டத்துயானையின் பிடரில் பொற்றட்டுட னெடுத்துத்திருமுறையைவைத்தபின்முறைமையாகச்சேக்கிழார்சுவா மிகளை யானையின்மேல் எழுந்தருளச்செய்து தாமுங்கூட அதில்ஆரூட ம்செய்து முறைமைப்படிதமது இரண்டுகைகளாலும் இரண்டுசாமரை களைவீச வேதங்கள்முழங்கவும் தேவர்கள்கற்பகமலர் மழையைப்பொ ழியவும் திருவீதியை வலமாகவரும்போது நடேசமூர்த்தியின் கிரு பையைநினைந்து பெரியஅரசர்பிரானாகிய சோழமகாராஜா நான்செ ய்ததவப்பயன்இதுவல்லவோவென்று ஆநந்தித்துச்சொல்லினர்-என்க.

வாரணத்திலிவரைவரக்கண்டதிருவீதி மறுகுதொறுந்
தூய்மைசெய்துவாழைகளுநாட்டிப், பூரணகும்பமுமமை
த்துப்பொரியுமிகத்தூவிப்- பொன்னரிமாலையுநறும்பூமா
லைகளுந்தூக்கித், தோரணங்கணிரைத்துவிரைநறுந்தூப
மேந்திச்- சுடர்விளக்குமேற்றியணிமணிவிளக்குமேந்தி,
யாரணங்கள்விரித்தோதி மாமறையோரெதிர்கொண்டுற்று
கெடுப்பவாழ்த்தெடுத்தாரரம்பையர்களெல்லாம். (எஅ)

இ-ள். சேக்கிழார்சுவாமிகள் அரசனுடன் யானையின்மீது ப்வனி வரக்கண்ட வீதிகள்தோறும் மெழுக்கிட்டு வாழைமரங்களை நாட்டிப் பூரணகும்பங்களும்வைத்து பொரிகளை அதிகமாகத்தூவிப் பொன்னரி மாலைகளையும் மணமுள்ள புஷ்பமாலைகளையும் தொங்கக்கட்டி தோர ணங்கள் நிரைத்து நல்லதூபமெடுத்து தீபங்களேற்றி அழகியமாணிக் சதீபங்களும்வைத்து விரிவாய் வேதங்களோதி பிராமணர்கள் எதிர் கொண்டுவந்து அறுகினால் ஆலாத்திசெய்ய அரமாதர்கள் மங்களம் பாடினார்கள்- என்க.

கோ. மா. ப. ஜ. சபா௵ 20 ஆ 1873 ௵ கேபீ



பொல்லாப்பிள்ளையாருக்கு நம்பியாண்டார் மகா நைவேத்தியஞ்செய்து அத்தியயனம்பெறறது.

வேறு.

காவலனரிவர்தவரிவர்காவலர் கவரியிடத்தகுமோவெ
ன்பார், சேவையர்காவலனர்சிவமானசிறப்பிதுநல்லசிறப்
பென்பார், தேவருமெழுதவொணுமறையைத்தமிழ்செய்
துதிருப்பதிகம்பாடு. மூவருமொருமுதலாயுலகத்துமுளை
த்தமுதற்பொருடானென்பார். (எகூ)

இ-ள். இவரோ அரசர் அவரோ தவசி அரசர் சாமரைபோடத்த
குமோவென்று சிலர்சொல்வார்கள் சேக்கிழார்சுவாமிகள் சிவவேடங்
கொண்டசிறப்பாகியஇதுதிவ்யமானசிறப்பென்றுசிலர் சொல்வார்கள்
தேவரும் எழுதற்கரியவேதத்தைத் தமிழ்செய்து திருப்பதிகம்பாடிய
ருளிய மூவர் முதலிகளும் சேக்கிழார்சுவாமிகளென ஒருமூர்த்தியாய்
இவ்வுலகத்தில் திருவவதாரஞ்செய்த முதன்மையானபொருளேயென்
று சிலர் சொல்வார்கள் - என்க.

மின்மழைபெய்ததுமேகவொழுங்குகள்விண்ணவர்கற்
பகவிரைசேர்பூ,நன்மழைபெய்தனர்0சேவையர்காவலர்நா
வலரின்புறநாவாரச்,சொன்மழைபெய்தனரிரவலர்மிடிகெ
டவள்ளிமுகந்தெதிர்சோளேசன், பொன்மழைபெய்தன
னுருகியநெஞ்சொடுகண்மழையன்பர்பொழிந்தார்கள். ()

இ-ள். மேகசாலங்கள்மின்னலுடனே மழைபெய்தன தேவர்கள்
கற்பகவிருக்ஷத்தின் வாசனைபொருந்திய புட்பமாரிபெய்தனர். சேக்கி
ழார்சுவாமிகள்பேரில்வித்வான்கள்இன்பத்துடன்வாக்கினல் பாடலா
கியமழைபெய்தனர்சோழமகாராஜாயாசகரது*வறுமையானகோடை
நீங்கும்படி அள்ளியள்ளியெடுத்துப் பொன்மழைபெய்தனர் - அடி
யார்கள் உருகியமனமுடன்ஆநந்தக்கண்ணீர்மழைபெய்தனர் - என்க.

மதுரவிராமாயணகதையுரைசெய்த வான்மிகபகவனு
மொப்பல்ல, விதிவழிபாரதமுரைசெய்துகரைசெய்தவே
தவியாதனுமொப்பல்ல,சிதைவறவாயிரநாவுடனறிவுளசே
டவிசேடனுமொப்பல்ல, பொதியமலைக்குறுமுனிவனு
மொப்பல புகழ்புனைகுன்றைமுனிக்கென்பார். (அக)

---

0 சேவையர்காவலர்நாவலரின்புறநாவாரச்,சொன்மழைபெயதனர்
என்பதற்கு - சேவையர்காவலர் இன்புறநாவலர்நாவாரச்சொன்மழை
பெய்தனர்எனக்கொண்டுகூட்டிப்பொருளுரைக்கினுமமையும்.

* பொன்மழையென்றதால்வறுமைக்கோடையென்றுரைக்கப்பட்டது.

இ-ள். புகழ்மாலைபூண்ட சேக்கிழார்சுவாமிகளுக்கு மதுரமாகிய இராமாயணகாவியத்தைச்செய்த வான்மீகமுனிவரும்ஒப்பல்லர்: கிரமமாகப் பாரதத்தைக்காவியமாகச்செய்துமுடித்த வேதவியாசரும் ஒப்பல்லர்: பழுதறஆயிரம்நாவுள்ளஅறிவின்மேம்பட்ட ஆதிசேடனாகிய மகானும் ஒப்பல்லன: பொதியமலையில்வீற்றிராநின்றஅகஸ்தியமுனிவரும் ஒப்பல்லரென்றுசொல்வார்கள்- என்க.

மெய்யுளசிவசாதனமும்வெளிப்பட வெண்ணீறெழு
தியகண்ணேறுங், கையுந்திகழ்மணிகண்டமுமொளிதரு
கவளிகையும்புத்தகவேடு, நையுந்திருவுளமழியுந்தொறு
மரகரவெனுநாமமுநாமெல்லா, முய்யும்படியருள்கருணை
யுமழகிதெனத்தொழுதனருலகவரெல்லாம். (அ௨)

(இ-ள்.) சேக்கிழார் சுவாமிகளது திருமேனியின்கண்ணுள்ள சிவசாதனங்களும் யாவர்க்குந் தெரியும்படி விபூதிதரித்திருக்கும் காட்சியும் அஞ்சலியஸ்தமும் ருத்திராக்ஷமணிந்தகண்டமும் விளக்கமுள்ள புத்தகக்கவளிகையும் புத்தகஏடும் கனிந்த உள்ளமானது உருகுந்தோறும் அரகரவென்கிற ஒலியும் நாமெல்லாம் பிறவித்தடுமாற்றத்தினின்றும் பிழைக்கும்படி யருளும் கிருபாநோக்கமும் அழகுள்ளனவென்றுசொல்லியுலகத்தாரெல்லாம் தொழுதனர்-என்க.

பூவைமறந்தனள்வெண்டாமரையில் புகல்தருசங்கப்
புலவோர்சொற், பாவைமறந்தனள்தேசசுபாடித பயனைம
றந்தனள்பதுமத்தோ, னாவைமறந்தனள்பொதியமலைத்த
லைநண்ணியபுண்ணியமுனிவனெனுங், கோவைமறந்தன
ள்சேவையர்காவலனார்திருநாவிற்குடிகொண்டாள். (அ௩)

(இ-ள்.) சரஸ்வதியானவள் தனக்கிடமாகிய வெள்ளைத்தாமரைமலரை மறந்தனள் புகழும்படியான சங்கத்தார்களுடைய சொல்நிறைந்த காவியங்களை மறந்தனள் - தேயத்திலுள்ளோரிடத்து நிகழுமினிய சொற்றிரளின் பயனைமறந்தனள் பிரமதேவனுடைய நாவையுமறந்தனள் பொதியமலையில் வீற்றிருக்கும் சிவபுண்ணியமிக்க(தமிழாசிரியரான) அகஸ்தியமுனிவரை மறந்தனள்சேக்கிழார்சுவாமிகளுடைய திருநாவினிடத்தில்வந்து குடியாயிருந்தனள் - என்க.

இப்படியிப்படிதன்னில்விதிப்படி யிம்பருமும்பருமே
னேரு, மப்படிசூழவரத்திருவீதிவலஞ் செய்தணைந்தம்ப
லமுன்றிற், றப்பறயானையினின்றுமிழிந்தரசனுமுனைசெ
றிசேவையர்கோவு, முப்புரிநூன்மறையோரொடணைந்தெ
ழுதியமுறையைத்திருமுன்வைத்தார். (அ௪)

(இ-ள்.) இவ்வாறு இவ்வுலகத்தின்கண்முறையாகத் தேவர்களும் மனிதர்களும் மற்றையாரும் அத்தன்மையாய்ச் சொல்லித் துதித்துக் கொண்டுசூழ்ந்துவர,த்-திருவீதிவலஞ்செய்து சிற்சபையின்திருவாய்தலின்கண்வந்து மேன்மையுள்ள சேக்கிழார்சுவாமிகளும் சோழமகாராஜாவும் நன்மையுற யானையைவிட்டிறங்கி முப்புரிநூலணிந்ததில்லைவாழந்தணர்களுடன் உள்ளேசென்று எழுதியதிருமுறையை நடேசர்சந்நிதியின்கண்வைத்தனர்- என்க.

வேறு.

அண்டவாணரெதிர்தெண்டனுகவனை வரும்விழுந்தபி
னெழுந்துசீர், கொண்டசேவைகுலதிலகருக்கனைவருந்துதி
த்தெதிர்கொடுத்தபேர்,தொண்டர்சீர்பரவுவானெனப்பெ
யர்சுமத்திஞானமுடிசூட்டிமுன், மண்டபத்தினிலிருத்தி
மற்றவனாவளவர்பூபதிவணங்கினுன். (அரு)

(இ-ள்.) பல்லாயிரகோடி அண்டங்களினும் பரிபூரணாய்நிறைந்துள்ள தேவதேவராகிய நடேசமூர்த்தி சந்நிதியில் அஷ்டாங்கபஞ்சாங்கமாக யாவரும் நமஸ்கரித்தெழுந்து சிறப்புப்பொருந்திய,சேக்கிழார்சுவாமிகளுக்கு யாவரும்சொல்லியபேராவது (தொண்டர்சீர்பரவுவார்) அடியார்கள் சிறப்பினைத்துதிசெய்கின்றவனெனப்பெயர் கொடுத்து ஞானமகுடாபிஷேகஞ்சூட்டி மண்டபத்தில் அவனா யெழுந்தருளியிருக்கச்செய்து சோழமகாராஜாவானவர் சேவித்துக்கொண்டனர்- என்க.

மூவரோதுதிருமுறைகளேழுதிருவாதவூரர்முறையொ
ன்றிசைப், பாவனாந்தமுறையொன்றுமூலர்முறை யொ
ன்றுபாசுரமதாதியாக், கோவைசெய்தமுறையொன்றுசே
வையர்குலாதிநீதிமுறையொன்றுடன், பாவைபாகர்திரு
வருள்சிறந்தமுறைபன்னிரண்டெனவகுத்தபின். (அசு)

(இ-ள்,) திருஞானசம்பந்தசுவாமிகள் முதலாகிய மூவர் அருளிச்செய்த திருமுறைகள் ஏழு. மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச்செய்த திருமுறையொன்று, திருவிசைப்பாவென்னுந் திருமுறையொன்று. திருமூலநாயனுர் அருளிச்செய்த திருமந்திரமென்னும் திருமுறையொன்று - சொக்கநாதசுவாமி திருவாய்மலர்ந்தருளிய திருப்பாசுரமுதலாகச் சேர்க்கப்பட்டுள்ள பிரபந்தத்திருமுறை யொன்று. சேக்கிழார்சுவாமிகள் அருளிச்செய்த திருத்தொண்டர்புராணமாகிய திருமுறையொன்றுடன் பார்வதிபாகராகிய பரமசிவத்தின்திருவரு

ள் நிறைந்திருக்கும்திருமுறைகள்பன்னிரண்டாக ஏற்படுத்தியபின்னர்- என்க.

ஆளுடையபிள்ளையார் திருமுறை- ங, அப்பர்சுவாமிகள் திருமுறை-ங, சுந்தரமூர்த்திசுவாமிகள்திருமுறை-க. ஆக-எ-ம், மாணிக்கவாசகசுவாமிகள் திருவாசகமும் திருச்சிற்றம்பலக்கோவையாருஞ்சேர்ந்ததிருமுறை-க-ம்,திருமாளிகைத்தேவர்,கருவூர்த்தேவர், நம்பிகாடவர்கோன்,கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார்,புருடோத்தமர், சேதிராயராகிய இவ்வெண்மர் அருளிச்செய்ததிருவிசைப்பாத்திருப்பதிகங்களிருபத்தெட்டும், சேந்தனாரருளிச்செய்த திருப்பல்லாண்டுஒன்றும்,ஆக-உகூ-ம்சேர்ந்ததிருமுறை-க-ம்,திருமூலர்ஆண்டுக்கொருதிருமந்திரமாக மூவாயிரம் ஆண்டளவும்அருளிச்செய்ததிருமந்திரத் திருமுறை-க-ம், சொக்கலிங்கமூர்த்தி பாணபத்திரர்பொருட்டுச் சேரமான்பெருமாள் நாயனாருக்குளெழுதியருளிய திருமுகப்பாசுரம் முதலாகக்கோத்த முப்பத்தாறு திவ்வியபிரபந்தங்கள் சேர்ந்த திருமுறை-க-ம், ஆகிய பதினொன்றுடன் திருத்தொண்டர்புராணமென்னும் பெரியபுராணம் ஒன்றும்சேர்ந்து பன்னிரண்டுதிருமுறையாம் இவற்றின்வகையைத் திருமுறைகண்டபுராணத்திற் கண்டுகொள்க.

தோடுசெய்ததிருநெறியசெந்தமிழோ டொக்குமென்
றுணைதொடர்ந்துசெப்,பேடுசெய்துநடராசர்சந்நிதியிலே
ற்றினார்களிதுபாலிசூழ், நாடுசெய்ததவநீடுகுன்றைவளந
கரிசெய்ததவநிகரிலாப், பீடுசெய்தபகிரதிகுலத்திலகர்சே
க்கிழார்செய்தபெருந்தவம். (அஎ)

(இ-ள்.) தோடுடையசெவியனென்று ஆளுடையபிள்ளையார்-முதற்பாசுரமெடுத்தோதியருளிய செவ்விய திருநெறித்தமிழ்வேதமாகிய தேவாரத்துடன் இஃதும்ஒப்பாகுமென்று முதல்தொடங்கிச் செப்பேட்டிலெழுதி நடேசமூர்த்தியின் சந்நிதியில்வைத்தார்கள் இது பாலாறுசூழ்ந்த தொண்டைநாடு செய்ததவம் வளமிக்க குன்றத்தூரென்னும் நகரம் செய்ததவம். ஒப்பில்லாதபெருமைபொருந்தியகங்காகுலோத்துங்கராகிய சேக்கிழார்மரபினர்செய்த பெரியதவமாம்- என்க.

ஆயவேலையநபாயனிந்நிலைமை யாதலாலநுசர்பாலரு,
வாயரெங்குளரெனப்பணிந்திரு மருங்குநின்றவர்விளம்பு
வார், தூயகுன்றைநகர்மீதுதம்பெயர் துலங்கவோர்குள
மமைத்தபி, னேயநாகையரனார்திருப்பணியியற்றியவ்வி
டையிருந்தனர். (அஅ)

(இ-ள்.) அப்போழ்து அநபாய சோழச்சக்கிரவர்த்தி சேக்கிழார்சுவாமிகள் தன்மையிவ்வாறாயினதால்இவர்க்கிளைஞராகிய பாலறாவாயர் எங்கிருக்கின்றனரென்றுவினவ, இருபக்கத்திலுமிருந்தவர்கள் வணங்கிச்சொல்லுவார்கள் மேன்மைமிக்க குன்றத்தூரில் தமது பெயர் விளங்கும்படி பாலறாவாயன்கேணியென்று ஒருதடாகம் அமைத்து-பிறகு தமக்கு அத்தியந்தப்பிரியமாகிய திருநாகேசுரர் ஆலயத்திருப்பணியுஞ் செய்துகொண்டு அவ்விடத்திலிருக்கின்றனர் - என்க.

என்றுசொல்லவவர்தமையழைத்தரச னிவரமைச்சரிவுர்பட்டமு, மன்றன்மாலைபுனைதொண்டைமானென வகுத்தபின்றமதுமண்டல, மன்றுவற்பம்வரவந்தடைந்தவரை யாற்றல்செய்துதொண்டைமண்டல, நின்றுகாத்தபெருமானெனத்தமது பெயரையெங்கணுநிறுத்தினார். (௮௯)

(இ-ள்)என்றுசொல்லச்சோழமகாராஜா அவரைவரவழைத்து(இது முதல்)இவர்மந்திரியென்றுசொல்லிநறியமாலையணிந்த தொண்டைமானெனப்பட்டப்பெயருங்கொடுத்தபின்தமதுதொண்டைநாட்டில்அக்காலத்தில்கருப்புவர அங்கிருந்துவந்துசேர்ந்தவர்களையெல்லாம் ஆதரணை செய்து தொண்டைமண்டலங் காத்தபெருமானெனத் தமது பெயரை அஷ்டதிக்கெங்கும் நிலைநிறுத்தினர்- என்க.

தொண்டர்சீர்பரவு சேக்கிழார்குரிசி றூயதில்லைநகர்தன்னிலே, பண்டுமூவர்பதிகத்து வந்தவறுபத்துமூவர்கதைதனையுணர்ந், தண்டவாணரடியார்கடம்முட னருந்தவந்தனிலிருந்துபி, னிண்டைவைத்தசடையம்பலத்தவனெடுத்தபாதநிழலெய்தினார். (௯௰)

(இ-ள்.) அடியார்கள் சிறப்பினைத் துதிசெய்த சேக்கிழார்சுவாமிகள் தூய்மையாகிய தில்லைக்ஷேத்திரத்தில் வீற்றிருந்து பழமையான மூவர்களுடைய திருப்பதிகத்திற்சொல்லியஅறுபத்துமூவர் சரித்திரத்தைத் தியானஞ்செய்துகொண்டு சிவனடியார்களுடன் அருமையாகியதவத்திலிருந்து பிறகு இண்டைமாலையைத்தரித்த நடேசமூர்த்தியின் குஞ்சிதபாதநிழலிலடைந்தனர்- என்க.

வாழிதில்லைமணிமன்றுளென்றுநட மாடுமங்கணர்மலர்ப்பதம், வாழிகாழிநகர்வாழவந்ததிரு நெறியராதிபதிவள்ளல்தாள், வாழியன்பர் திருநீறுமிட்டதிரி முண்டமுங்

துவயகவசமும், வாழிகுன்றைமுனிசேவையாதிதிருவா
ய்மலர்ந்தருள்புராணமே. (கூக)

(இ-ள்.) தில்லையின்கண் அழகிய சிற்சபையினிடத்து சதாநிர்த்தனஞ் செய்தருளும் நடேசமூர்த்தி மலர்த்திருவடிகள் வாழ்க: சீகாழியானது வாழும்படி திருவவதாரஞ்செய்தருளிய திருநெறித்தலைவராகிய திருஞானசம்பந்தசுவாமிகள் திருவடிகள் வாழ்க அடியார்க்குரிய விபூதியும் திரிபுண்டரமும் காவிருத்திராக்ஷமும் வாழ்ககுன்றத்தூரில்அவதரித்துள்ள சேக்கிழார்சுவாமிகள்திருவாய்மலர்ந்தருளியதிருத்தொண்டர்புராணம் வாழ்க- என்க.

தேசிலங்குமுகில்குன்றையாதிபதி தொண்டர்சீர்பரவு
சேக்கிழார், வாசலன்றுமுதலின்றுகாறுமினி மேலும்வா
ழையடிவாழையா, வீசுதென்றன்மணிமண்டபத்தரசு வீ
ற்றிருக்குமுடிமன்னருக், கீசனன்பர்கள்புராணமுஞ்சொ
லியமைச்சுமாகிநலமெய்துமால். (கூஉ)

(இ-ள்.) தேஜஸுடனே விளங்குகின்ற மேகத்துக்கொப்பாகிய விதரணமுள்ள குன்றைநகர்த்தலைவரான அடியார்கள் சிறப்பினைப்பாடியருளிய சேக்கிழார்சுவாமிகள் மரபு அற்றைதொட்டிற்றைவரையும் இனிமேலும்வாழையடிவாழையாயோங்கத் தென்றற்காற்று வீசும்படி ரத்தினமண்டபத்தில் வீற்றிருக்கின்ற சோழராஜர்களுக்குச் சிவனடியர்புராணத்தைச்சொல்லிக்கொண்டு மந்திரிகளுமாகியிருந்து சுபம்பெறக்கடவது- என்க.

அண்டவாணர்தொழுதில்லையம்பலவ ரடியெடுத்துலகெ
லாமெனத், தொண்டர்சீர்பரவுசேக்கிழான்வரிசைதுன்று
குன்றைநகராதிபன், றண்டகாதிபதிதிருநெறித்தலைமை
தங்குசெங்கைமுகில்பைங்கழற், புண்டரீகமலர்தெண்ட
னிட்டுவினை போக்குவார்பிறவிநீக்குவார். (கூங)

(இ-ள்.) தேவதேவரும் யாவருந்தொழுகின்ற தில்லையம்பலவருமாகிய நடேசமூர்த்தி உலகெலாமென்று முதலடியெடுத்துக்கொடுத்தவாற்றால் அடியார்கள் சிறப்பினைத் துதிசெய்த சேக்கிழாரென்பவரும் சிறப்புமிக்க குன்றைநகருக்கதிபருந்தண்டகநாட்டுத்தலைவருமாகியதிருநெறித்தலைமைநிலைபெற்ற வள்ளன்மைமிக்கமேகத்தையொப்பாகிய அருண்மொழித்தேவரது திருவடித்தாமரைகளுக்குத் தெண்டனிட்டு நல்வினை தீவினைகளைப் போக்குகின்றவர்களே- சென்மத்தையும் கடப்பவர்களாம்- என்க.

வேறு.

சிறப்புப்பாயிரம்.

திருக்கிளருங்கயிலைமலைக்காவல்பூண்ட செல்வமலிதி
ருநந்திமரபில்வந்து, கருக்குழியிலெமைவீழா தெடுத்தா
ட்கொள்ளுங் கருணைமிகுமெய்கண்டதேவர் தூய, மருக்
கிளர்தாள்பரவுமருணந்திதேவர் மகிழுமறைஞானதேவ
ருக்கன்பாகி, யிருக்குமுமாபதிதேவர்சேக்கிழார்தமிசை
ப்புராணம்மொழிந்தாரென்பமாதோ. (கூசு)

(இ-ள்.) முத்திச்செல்வம் விளங்குகின்ற ஸ்ரீகயிலாயத்தைக் காவல்செய்யும் அதிகாரமிக்க நந்திதேவர்மரபில் அவதாரஞ்செய்து ஜெனனசாகரத்தில் வீழாவண்ணம் அடியோங்களையெடுத்தாட்கொள்ளுங்கிருபைமிகுந்தமெய்கண்டதேவரது பரிசுத்தமாகிய வாசனைமிக்கதிருவடியைத்துதிக்கும்அருணந்திதேவர்மகிழும்படியானமறைஞானசம்பந்தசிவாசாரியருக்குஅன்பாய்வீற்றிருக்கும் உமாபதிசிவாசாரியர் சேக்கிழார் சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருத்தொண்டர்புராணவரலாற்றை விரித்துச்சொல்லினர்- என்க.

சந்தானசாரியர் நால்வருளொருவராகிய உமாபதிசிவாசாரியர்

அருளிச்செய்த

சேக்கிழார்சுவாமிகள்புராணமென்னும்

திருத்தொண்டர்புராணவரலாறு - முற்றிற்று.

ஆ-திருவிருத்தம் - ௱ச.

சிறப்புப்பாயிரப் பகுவலிற்குறித்த

வேதசைவசித்தாந்தசம்பன்ன சந்தானசாரியர்கள்

வரலாற்றின் சுருக்கம்.

அவ்வருள்முதல்வர்திருநந்திதேவர் - அவர்மாணாக்கர் சனற்குமாரமாமுனிவர், அவர்மாணாக்கர் சத்தியஞானதரிசனிகள், அவர்மாணாக்கர் பரஞ்சோதிமாமுனிவர், அவர்பரமசிவத்தின்அருளுப்பாட்டினால் ஸ்ரீகைலாசத்தினின்றும் தெக்ஷிணத்திற்கெழுந்தருளியநாளில் அவர்பால்

சிவஞானோபதேசம்பெற்றவர் திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்ட சிவாசாரியர் என்னும் சுவேதவனப்பெருமாள் அவர்பாலுபதேசம்பெற்ற நாற்பத்தொன்பதின்மருள் சிரேட்டராய்த் திருத்துறையூரின்கண் வீற்றிருந்த சகலாகமபண்டிதரென்னும் அருணந்திசிவாசாரியர் அவர்மாணாக்கராய் ஸ்ரீசிதம்பரத்திலெழுந்தருளியிருந்த மறைஞானசம்பந்த சிவாசாரியர், அவர்மாணாக்கர் தில்லைவாழந்தணர்களிலொருவராய் அத்தலத்தைச்சார்ந்த கொற்றவன்குடியிலெழுந்தருளியிருந்த உமாபதிசிவாசாரியர் அவர் சேக்கிழார்சுவாமிகள் பெரியபுராணம்பாடியருளியவரலாற்றைத் திருத்தொண்டர்புராணவரலாறென்றுபாயிரத்துடன்நூற்றுமூன்றுதிருவிருத்தங்களாலருளிச்செய்து திருமுறைகண்டபுராணம்திருத்தொண்டர்புராணசாரமுதலிய சித்தாந்தநூல்களுஞ்செய்தருளினர்.

சேக்கிழார்சுவாமிகள்திருவடிகளேசரணம்.

திருச்சிற்றம்பலம்:



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருமுறைகண்டபுராணம்:

கருமுறைவிண்ட்டியவருயுமாறருள் கவுணியர்குலதீபந், தருமிறைநாவுக்கரசாரூரர் தாஞ்சேமித்திடுமத், திருமுறைகண்டபுராணமுரைக்கச் சிந்துரமுகனற்றாள், ஒருமுறையிருமுறைமும்முறைவாழ்த்தியுவந்தன்பொடுபணிவாம்.

(இ-ள்) ஜனனத்தொடக்குநீங்கி அடியார்க ளீடேறும்நெறியை யருளாநின்ற கவுணியகுலத்தில் தீபம்போல் அவதரித்த திருஞானசம்பந்தசுவாமிகளும் திருநாவுக்கரசுசுவாமிகளும் சுந்தரமூர்த்திசுவாமிகளும் சேமித்துவைத்தபிரசித்தமான திருமுறைகண்ட புராணத்தைச் சொல்வதற்கு யானைமுகக்கடவுளின் நல்லதிருவடிகளை ஒருகாலும் இருகாலும் முக்காலும் துதித்துக் களித்துச் சிவநேசத்தோடு வணங்குவாம்-என்க.

வேறு.

உலகமகிழ்தருசையமீது தோன்றி-யோவாது வருபொன்னிசூழ்சோணாட்டின், றிலகமெனவிளங்குமணி மாடவாரூர்த்தியாகேசர்பதம்பணிந்து செங்கோலோச்சி, யலகி

ல்புகழ்பெறுராசராசமன்ன-னபயகுலசேகரன்பாலெய்து மன்பர், இலகுமொருமூவருள்பதிகமொன்றொன்-றேயி னிதினுணாசெய்யவன்பாற்கேட்டு. (௧)

(இ-ள்.) உலகத்தார் மகிழ்ச்சிகொள்கின்ற சையமலைமேற்றோன்றி யிடைவிடாது பெருகிவருகின்றகாவிரிசூழ்ந்த சோழநாட்டிற் பூதேவிக்குத் திலகம்போல் விளங்காநின்ற - மணிமாடங்களையுடைய திருவாரூரின்கண் தியாகேசர் திருவடிகளைப் பணிந்து செங்கோலுலகமுழுதும் நடாத்தி அளவில்லாத புகழ்பெற்ற ராஜராஜமன்னவனென்னும் அபயகுலசேகர சோழமகாராஜா தம்மிடத்தில் வருகின்ற சிவனடியார்கள்நிலைபெற்றுள்ள ஒப்பற்றமூவர்முதலிகள் அருளியதிருப்பதிகங்களில் சிலசில இனிதாகஓதுதலும்அவற்றைச்சிவநேசத்துடன்கேள்விற்றிறு-என்க.

கையிரண்டுமுச்சிமேலேறக்கண்ணீர்-கணாந்தோடமெய்ம்முழுதும்புளகம்போர்ப்ப, வையன்மலர்ப்பதமுளத்தேகொண்டுபோற்றி- யரியமுறைதேடவெங்கு மிலாமையாலே,நையுமனத்தினனாகியிருக்குங்காலை- நாரையூரினிலாதிசைவமறையோன்பால், வையமெலாமீடேறச்சைவம்வாழ-மாமணிபோலொருசிறுவன்வந்துதோன்றி. (௨)

(இ-ள்.) இரண்டுகைகளுஞ் சிரசின்மேலேறவும் கண்ணீர் அதிகரித்துப்பெருகவும் தேகமெங்கும்புளகாங்கிதமாகவும் சிவபெருமானது ஸ்ரீபாதத்தை யுள்ளத்திற்கொண்டுபோற்றிப் பெறுதற்கரியதிருமுறைகளைத் தேசங்கள்தோறும் தேடிப்பார்க்க எவ்விடத்தும்அகப்படாமையால் மகாராஜா வருந்தியமனத்ஸதயுடையவரா யிருக்குங் காலத்தில் திருநாரையூரென்னுந் திருப்பதியின்கண் ஒரு ஆதிசைவவேதியரிடத்தில் உலகுயிரெல்லாங் கடைத்தேறவும் சைவநெறிதழைக்கவும் மாணிக்கம்போல ஒருமைந்தர் அவதரித்து-என்க.

வளமொடுபநயனவிதிச்சடங்கும்பூண்டு - மறைமுதலாங்கலைபயின்றுவருநாளீன்ற, கிளர்மறையோனொரூர்க்குச்செல்லமைந்தன் கேடில்பிதாவுணாத்தமொழிப்படியே யங்கி, யிளமதிச்செஞ்சடைப்பொல்லாப்பிள்ளையாரை யேத்தியாராதிப்பானினிதினேகி, யுளமலியன்பொடுதிருமஞ்சனமுன்னகு-முரியவெலாஞ்செய்துநிவேதனமுன் வைத்து. (௩)

(இ-ள்.) சிறப்பாகஉபநயனவிதிச்சடங்குகளுஞ்செய்யக்கொண்டு வேதமுதலியகலைகளைக் கற்றுவருகின்றநாளில் தம்மைப்பெற்றதந்தை

யாகிய வேதியர் ஒரூர்க்குப்போனபடியால் புத்திரன் அழிவில்லாத தந்தைசொன்ன சொற்படியே அந்திக்காலத்தில்தோன்றுகின்ற இளம்பிறையைத்தரித்த செஞ்சடையையுடைய திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையாரைத்துதித்து ஆராதிக்கும்பொருட்டு இனிதாய்ச் சென்று உள்ளத்தில் மிகுந்தஅன்புடனே திருமஞ்சனமுதலியவனைத்துஞ்செய்து நிவேதனத்தைப் பிள்ளையார்திருமுன்வைத்து-என்க.

எம்பெருமானமுதுசெயவேண்டுமென்ன விறைஞ்சிட்
வுமமுதுசெயாதிருப்பக்கண்டு,வெம்பியுளமேதேனுந் தவு
றிங்குண்டோ-வேழமுகனேயடியேனிவேதித்திட்ட, பம்
பமுதமுண்ணாததென்னையென்னப்-பரிந்துதலைதனைமோ
தப்புகுங்காலெம்மா, னம்பிபொறுவெனத்தடுத்தவ்வமுத
மெல்லா-நன்கருந்தவுவந்துநம்பிநவில்வதானன்.   (ச)

(இ-ள்) எம்பெருமானேஇதனையமுதுசெய்யவேண்டுமென்றுபிரார்த்தித்துப் பணியவும் விநாயகர்அமுதுசெய்யாமலிருப்பதுகண்டுஉள்ளம்நொந்து இவ்விடத்தில் ஏதேனுந்தவறுண்டாயிற்றோ யானைமுகக்கடவுளே அடியேன் நிவேதனமாகவைத்த மிக்கஅமுதத்தை யுட்கொள்ளாதிருப்பது யாதுகாரணமென்றிரந்துகேட்டு வருந்தித் தமது தலையை மோதிக்கொள்ளப் புகுந்தபோது எமதாண்டவராகிய பிள்ளையார் நம்பியே பொறுவென்று தடுத்துஅவ்வமுதையெல்லாம் களிப்புடன் அருந்திடலும் நம்பியாண்டார் மகிழ்ந்து சொல்லத்தொடங்கினர்-என்க.

எந்தையேயினியடியேன்பள்ளிக்கேகி-லெங்கடேசிகன
டிப்பானதலாலே, சந்தமறைமுதற்கலைகணீயே யோதித்
தரல்வேண்டுமெனவேழமுகத்தோன்றானு, மந்தமறவோ
துவிக்கவோதிநம்பி மகிழ்ந்தனனன்றதுபோலமற்றைநா
ளும், விந்தையொடுநிகழநம்பியாண்டார்நம்பி மேவியிரு
ந்திடுஞ்செய்திவேந்தன்கேளா.   (ரு)

(இ-ள்.) எமதுதந்தையே இனிமேல் அடியேன் பள்ளிக்குச்சென்றால் எங்கள் உபாத்தியாயன் அடிப்பன் ஆதலால் சந்தத்தோடுங்கூடிய வேதமுதலாகிய கலைகளைத்தேவரீரே கற்பித்தருளல் வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய அவ்வாறே அவிச்சைத் தடைநீங்கும்படி வேதமோதுவித்தருள நம்பியாண்டார்கற்று அன்று மகிழ்ச்சி கூர்ந்தனர் அவ்வாறாகவே மற்றைநாட்களிலும் நடந்துவர நம்பியாண்டார்நம்பி பயின்றுவருஞ்செய்தியை ராஜராஜகுலசேகர சோழமகாராஜாவானவர் கேள்வியுற்று-என்க.


செல்வமிகுதிருநாரையூரின்மேவுஞ் சிவனளித்தமதக
ரிக்குச்சிந்தைகூர்ந்து, நல்லபுகழுடையநம்பி யாண்டார்
நம்பி-நண்பினெடுநிவேதிப்பான்மதுரமிக்க, வெல்லையில்
வாழைக்கனி தேனவலோடப்ப மெள்ளுண்டை யிவ்வுல
கோரொடுக்கவென்றே, மல்லன்மிகுசேனையுடனிராசராச
மன்னவனுமந்நகரில்வந்துசேர்ந்தான். (சு)

(இ-ள்.) வளப்பமிகுந்த திருநாரையூரிற் கோயில்கொண்டிராநி
ன்ற சிவபெருமானீன்றருளிய யானைமுகக்கடவுளுக்கு - மனமகிழ்ந்
து மிக்கபுகழுள்ளநம்பியாண்டார்நம்பியைக்கொண்டு சிவநேசத்துடன்
நிவேதனஞ்செய்விக்கும்பொருட்டுச் சுவைமிகுந்த அளவற்றவாழை
க்கனிகளுந் கட்டித்தேனும் அவலும் அப்பங்களும் எள்ளுண்டைமு
தலியவையும் இந்நகரத்திலுள்ளார் கொணர்கவென்று கட்டளைசெய்
து வலிமைமிகுந்த சேனைகளோடும் இராஜராஜசேகரரும் நாரையூரி
ல்வந்துசேர்ந்தனர்-என்க.

ஆங்கதனுக்கந்நகரி லிடம்போதாம லயல்சூழப்பதின்
காதவகலவெல்லே, மாங்கனிவாழைக்கனிகள்வருக்கையா
வும்வந்தனவவ்வெல்லையெல்லாமருவவைத்துப்,பாங்கினு
டனம்பிதாள்பணிந்துமன்னன்- பலகனிகள்கொணர்ந்த
வெலாம்பகர்ந்துபோற்றி, யீங்கிதனைப்பொல்லாதபிள்ளை
யாருக்-கிப்பொழுதேநிவேதிக்கவென்றுசொன்னான் (எ)

(இ-ள்.) அவ்வாறு அவர்கள் கொண்டுவந்த பண்டங்களுக்கு நா
ரையூரில் இடம்போதாமையால் அவ்வூர்ப்புறத்தில் பதின்காதம் அகல
மான எல்லைவரையில் மாங்கனிகளும் வாழைக்கனிகளும் பலாக்கனிக
ள்முதலியனவுமாக வந்ததுகளை அங்கங்கே யிருத்தி மகாராஜாவானவ
ர்அன்புடன் நம்பியாண்டார்நம்பியினுடையபாதத்தைவணங்கித் தாம்
கொண்டுவந்த பலவகைப்பட்ட கனிவர்க்கமுதலியவற்றைத் தெரிவி
த்து இப்பண்டங்களைப் பொல்லாப்பிள்ளையார்க்கு இப்போதே நிவே
தனஞ்செய்யவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தனர்-என்க.

நம்பியரசன்சொன்னவார்த்தைகேளா-நன்றுனதுபணி
யென்னவருளாலுன்னித், தும்பிமுகனடிபணிந்துமன்ன
னிங்குத்-தொகுத்தனநீயமுதுசெயவேண்டுமென்னக்,க
ம்பமதக்களிற்றுமுகத்தானுமங்குக் கருத்தினுட னம்பியு
ளாக்கிசைந்துகாட்ட, விம்பரினில்வந்தனநாற்சுத்திசெய்
தே-யிருந்தவெலாம்படைக்கவவனேற்றல்செய்தான்(அ)



மூவர்முதலிகள் திருமுறைக்கு யாழ்ப்பாணப்பெண் பண்ணடைவு இசைத்தது.

(இ-ள்.) மகாராஜாவானவர் தம்மைப்பிரார்த்தித்த விண்ணப்பத்தைக்கேட்டருளி உமது திருப்பணி நன்றென்று நம்பியாண்டார் நம்பி திருவையால் தியானித்துப் பொல்லாப்பிள்ளையாரது திருவடியைவணங்கி ராஜாவான்வ ரிவ்விடத்திற் கொணர்ந்ததுகளைத் தேவரீர் அமுது செய்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய நிலைபெற்றமதத்தையுடைய யானைமுகக்கடவுளும் அவ்வாறுதிருவுளப்பாங்காய் நம்பியின் விண்ணப்பத்திற் கிசைந்தருளலும் இப்பதியினிடத்துவந்த அப்பண்டங்களை. நால்வகைச் சுத்தியுஞ்செய்துபடைக்க அவற்றையெல்லாம் பிள்ளையார் அமுதுசெய்தருளினர்-என்க.

புகர்முகக்கைபுறப்படவேபடைத்தவெல்லாம் புகுந்த
விடமறியாமற்*போனபின்னே, யகநெகிழமெய்யரும்பிக்க
ண்ணீர்வார-நம்பிகழலன்பினலரசன்போற்றி, மிகவுமொ
ருவிண்ணப்ப மடியேற்குண்டு வேதியனேகேளென்றுவி
ளம்புவான்மெய்ப், புகழது சேர் மூவர்தமிழ் தொண்டர்
செய்திபூதலத்தில்விளங்கவெனப்போற்றிநின்றான். (சூ)

(இ-ள்.) விநாயகரதுபுள்ளிபரந்தமுகத்திலுள்ளதுதிக்கையானது வெளிப்படலும்படைத்தபண்டங்களெலலாம் போனவிடந்தெரியாமற் போய்விட்டன-பின்புமனமுருகவுடல்பூரித்துக்கண்ணீர்பெருக அன்புடனேநம்பியாண்டார்திருவடிகளைமகாராஜாவானவர்நமஸ்கரித்து இன்னுமொருவிண்ணப்பம் அடியேனுக்குளது-வேதியனே-கேட்டருள்வீரென்றுவிளம்புகின்றனர்அஃதுஅழியாப்புகழ்மை சேர்ந்துள்ள மூவர்முதலிகள் திருமுறையுந் திருத்தொண்டர் வரலாறும் இவ்வுலகின்கண் விளங்கவேண்டுமென்பதே யெனச்சொல்லித்துதித்துநின்றனர்.என்க

அந்தவுரைகேட்டலுமங்கரசன்றன்னை நம்பிமகிழ்ந்தரு
ள்புரிவானருள்சேர்மூவர், செந்தமிழ்களிருந்தவிட மன்
பருள்ளோர்-செய்திக்கவ்விநாயகன்றாள்சிந்தித்தெந்தா,ய
ந்தவகையேதென்றுகேட்டாலெந்தை-மகிழ்ந்தருளு மந்
நெறியைவழாதுனக்குத், தந்திடுவன்மன்னபொறுவென்
றுசொல்லித்-தந்திமுகன்சந்நிதியிற்றாழ்ந்துசென்றான்(ய)

(இ-ள்.) அவ்விண்ணப்பத்தைக் கேட்டவுடன் நம்பியாண்டார் மகாராஜாவைமகிழ்ந்து சொல்லுவார் திருவருள்பெற்ற மூவர்திருநெறித் தமிழிருக்குமிடத்தின்பொருட்டும் திருத்தொண்டர் வரலாற்றின்

---

* போயினவென்பது-போனவெனத்தொகுக்கப்பட்டது.

பொருட்டும் அவ்விநாயகருடைய பாதங்களைத்தியானித்து எந்தையே அவ்விவரம் ஏதென்று பிரார்த்தித்து வேண்டினால் எமது தந்தையாகிய விநாயகரும் முனிவின்றித் தெரிவித்தருள்வர் அவ்விதத்தை யுமக்குத்தவறாமல் தெரிவிப்பேன் அரசனே பொறுத்திருக்கவென்றுசொல்லிப் பிள்ளையாரது சந்நிதிக்கண்வந்துபணிந்துஉள்ளேபுகுந்தனர்-என்க.

சென்றுபணிந்திபமுகத்தோன் பாதப்போதைச் சென்னியில்வைத்தவனருளிற்றிளைத்துச்சிந்தை, யொன்றுமற வுருகிவிழிதாரைகொள்ள - வுண்மையினால்வந்தித்தங்கு வாவோன்றன்னை, யின்றமிழ்சேர்மூவர்தமிழிருந்தவெல்லையெல்லையில்சீர்த்திருத்தொண்டரியல்புமூர்த்தி,o நன்றுமருள்செய்தருளவேண்டுமென்ன நாகமுகனம்பிக்குநவிலலுற்றான். (மக)

(இ-ள்.) அவ்வாறுபுகுந்து யானைமுகக்கடவுள் பாதத்தைத் தமதுசிரத்தில்வைத்துஅவரது திருவருள்வசத்தராய்-சித்தவிகற்பம்சிறிதுமின்றியுருகிஆநந்தக்கண்ணீர்தாரைபெருக உள்ளபடிவந்தனைசெய்து பிள்ளையாரைநோக்கி இனியமதுரம்பொருந்திய மூவர் திருநெறித்தமிழ்வேதம்இருக்குமிடமும் அளவிடற்கரிய சீர்மையுள்ளதிருத்தொண்டர்வரலாறும் தெரியும்படியானைமுகமூர்த்தியே ஐயமறத்தேவரீர் அருள்புரியவேண்டுமென்றிரக்க யானைமுகக்கடவுளும் நம்பிக்குத் திருவாய்மலர்ந்தருள்வாராக-என்க.

வார்ந்தருட்கணீர்சொரியநம்பிகேட்ப-வண்டமிழ்களிருந்தவிடமன்றுளாடுங், கூர்ந்தவிருட்கண்டர்புறக்கடையின்பாங்கர்-கோலமலர்க்கைகளடையாளமாகச், சார்ந்தனவென்றருள்செய்துதொண்டர்பேறுஞ் சாற்றுதலாற்சகதலத்தோரருளைச்சார, வார்ந்ததமிழிருந்தவிடமன்பர்செய்தி-யத்தனையு*நம்பிமனத்தருளிற்கொண்டார். (மஉ)

(இ-ள்.) அவ்வாறு கண்களில் ஆநந்தபாஷ்பம்சொரியும்படி நம்பியாண்டார் பிரார்த்தித்தபோது அத்திருமுறைகள் இருக்குமிடம் மன்றுள் நடித்தருளுகின்ற நீலகண்டராகிய நடேசரது சிற்சபையின்புறத்தே அம்மூவரது அழகிய மலர்போன்ற அஸ்தமுத்திரைக் குறியிட்டுச் சேமித்திருக்கின்றனவென்றுரைத்துத் திருத்தொண்டரது வர

---

o நன்றுஉம்அருள்எனப்பதம்பிரித்துக்கொள்க-இதுவமுவமைதி.
* நம்பியருளிற்கொண்டாரென்பதும்- அது.

லாறுஞ்சொல்லி யருளினபடியால் உலகுயிர்கள் பரமசிவத்தின் அருளையடைதற்பொருட்டு முற்றியதிருநெறித்தமிழ்சேமித்தஇடமும் அடியார்கள் சரித்திரமவ்வளவும் நம்பியாண்டார் தமதுள்ளத்தின்கண் திருவருட்சார்பினால் மனனம்செய்துகொண்டனர்-என்க.

கொண்டுகுலசேகரனுங் கோன்பால்வந்து குஞ்சரத்
தோனருள்செய்தகொள்கையெல்லா, மண்டுபெருங்காத
லுடன்சொல்லியந்த வண்டமிழின்பெருமைதனை வகுத்
துச்சொல்வார்,கண்டபெருமந்திரமேமூவர்பாடல்-கைகா
ணுமந்திரங்கண்ணுதலோன்கூற,, லெண்டிசையுஞ்சிவன
ருளைப்பெறுதற்காக விம்மொழியின்பெருமையையானிய
ம்பக்கேணீ. (௰௩)

(இ-ள்.) அவ்வாறுசிந்தித்துக்கொண்டு குலசேகர சோழமகாராஜரிடத்தில்வந்து பிள்ளையார் அருளிச்செய்த வரலாறு முற்றும் அதிகரிக்கின்ற பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்து அத்திருநெறித்தமிழின் மகிமையை வகையுறச்சொல்லுகின்றார் மூவர்களோதிய திருமுறைகள் கைகண்ட மகாமந்திரங்களாம் பரமசிவம் ஓதியவேதங்கள் கைகாணு மந்திரங்களாம் எட்டுத்திசையிலுள்ளஆன்மாக்களும் பரமசிவத்தின் திருவருளைப்பெறுமாறு இத்திருநெறித்தமிழ்வேதத்தின் பெருமையை யாம்சொல்வோம் நீவிர்கேட்க-என்க.

சேட்டர்மலிகாழிநகர் வேந்தர்தாமுந்- தேவர்புகழ்திருத்
தோணிச்சிவனார்பங்கிற், பீடுடையவுமைமுலைப்பா லரு
ளாலுண்டு பிஞ்ஞகனைச்சினவிடைமேற் பெருகக்கண்டு,
தோடுடையசெவியன்முதற்கல்லூரொன்னுந் தொடைமுடி
வாப்பரசமயத்தொகைகண்மாளப், பாடினார்பதிகங்கள்பா
விடுலொன்றும்-பதினாறுயிரமுளதாப்பகருமன்றே (௰௪)

இ-ள். அறிவுடையோர்தங்குகின்ற சீகாழிப்பதியில் அவதரித்தருளிய திருஞானசம்பந்தப்பிள்ளையாரும் தேவர்களேத்துகின்ற திருத்தோணியப்பரது இடதுபாகத்திருக்கும் பெருமையுள்ள பார்வதியாரது திருமுலைப்பாலைச் சிவபெருமான்கருணையினாலுண்டு திருத்தோணியப்பரை வீரமுடையருஷபவாகனத்தின்மேல் ஆநந்தத்துடன் தெரிசித்துத் தோடுடையசெவியன்என்னும் பதிகமுதல் கல்லூரொன்னும் பதிகமிறுதியாக அந்நியசமயக்கூட்டங்கள் பிறபட்டொழியும்படி ஓதியருளினர் - அத்திருபதிகங்கள் பறுவலிற்சிறப்பாகியபதினாறுயிரமுள்ளனவாகச் சொல்லப்படும்- என்க.

திருநாவுக்கரையரொனுஞ்செம்மையாளர்தீயமணர்சிறை நீங்கவதிகைமேவுங், குருநாமப்பரஞ்சுடரைப்பரவிச்சூலை கொடுங்கூற்றாயினவென்ன வெடுத்துக்கோதி, லொருமா னைத்தரிக்குமொருவனையுங்காறு மொருநாற்பத்தொன்ப தினுயிரமதாகப், பெருநாமப்புகலூரிற்பதிகங்கூறிப் பின்ஞானகனரடியிணைகள்பெற்றுளாரே. (௯௫)

(இ-ள்.) திருநாவுக்கரையரொன்னுஞ் செவ்வியகுணத்தையுடைய அப்பர்சுவாமிகள் கொடிய சமணர்களது சிறையினின்றுநீங்கத் திருவதிகையிற் கோயில்கொண்டருளிய வீரட்டானேசுரரைக் கொடிய சூலைநோய்காரணமாகக் கூற்றாயினவென்று முதல்தொடங்கிய பதிகமுதல் ஒருமானைத்தரிக்கு மொருவனையுமென்னும்பதிகமீறாகநாற்பத்தொன்பதினுயிரம் திருப்பதிகங்கள் ஓதியருளி மிக்கபுகழுள்ள திருப்புகலூரிற் பரமசிவத்தின்திருவடியைச்சேர்ந்தனர்-என்க.

பின்புசிலநாளின்கணாரூர்நம்பி-பிறங்குதிருவெண்ணெய்நல்லூர்ப்பித்தாவென்னு, மின்பமுதற்றிருப்பதிக மூழிதோறு-மீறாமுப்பத்தெண்ணாயிரமதாக,முன்புபுகன்றவர்கொடித்தான்மலையிற்சேர்ந்தார் முறைகளெல்லாந்திருத்தில்லைமூதூர்தன்னி, லன்றவர்கையிலச்சினையால் வைத்தார்மன்ன-வாராய்ந்துதருகவெனவருளிச்செய்தார் (௯௬)

(இ-ள்.) சிலநாள்பிறகு சுந்தரமூர்த்திசுவாமிகள் சிறந்ததிருவெண்ணெய்நல்லூரின்கண் பேரின்பத்தைத்தருகின்ற பித்தாவென்னும் முதன்மொழியுள்ள திருப்பதிகமுதல் ஊழிதோறும்என்னும் பதிகமீறாக முப்பத்தெண்ணாயிரம்பதிகங்கள் ஆதிகாலத்தில்ஓதியருளினவராய்த் திருக்கயிலையிற்சென்றமர்ந்தனர் - அத்திருமுறைகள்அனைத்தும் திருத்தில்லைப்பதியின்கண் அக்காலத்திற் சமயாசாரியராகிய அம்மூவரும் தமது அஸ்தமுத்திரையிட்டுச் சேமித்துவைத்தனர்- ஆதலால் அரசனே - அவற்றைஆராய்ந்து தரவேண்டுமென்றுசொல்லியருளினர்-என்க.

அருமறையைச்சிச்சிலிபண்டருந்தத்தேட மதுபோல்வன்றிதுவென்றுமுளதாமுண்மைப், பரபதமுந்தற்பரமும் பரனேயன்றிப்-பலரில்லையென்றெழுதும்பனுவல்பாரி,னெரியினிடை வேவாதாற்றெதிரேயோடு - மென்புக்குமுயிர்கொடுக்குமிடுநஞ்சாற்றுங், கரியைவளைவிக்குங்கன்மிதக்கப்பண்ணும்-கராமதலைகணாயினுறக்காற்றுங்காணே. ()

(இ-ள்.) பூர்வத்தில்அருமையாகிய வேதத்தைச்சிச்சிலிப்பறவைவிழுங்கினதால்அதைக்காணமல்தேடினதுபோலல்ல.இத்திருமுறையென்றும்நிலைபெற்றதாகும் சத்தியப்பொருளாகியபரபதமும்தற்பரமும்பரமசிவமேயல்லாமல்பலகடவுள்இல்லையென்றெழுதியருளியபனுவலாகும் உலகின்கண் அது நெருப்பில்வேகாது - ஆற்றுப்பெருக்கில் எதிரேறிவரும் சுட்டஎலும்புக்கும் உயிர்கொடுக்கும்இட்டவிஷத்தைமுறிக்கும்-மதயானையைவணங்கப்பண்ணும்-கருங்கல்லைக்கடலில்மிதக்கப்பண்ணும்-முடிக்குளையில் முதலையானது பிள்ளையைக்கக்கும்படி செய்யும்-அதன்மான்மியத்தையறிக- என்க.

என்றென்று நம்பிக்குப்பரிவாலுண்மையின்றமிழின்பெரு
மைதனையியம்பக்கேட்டுக், குன்றொன்றுபேருருவங்கொ
ண்டாற்போலுங் குஞ்சரத்தோனருளினையுட்கொண்டும
ன்னன்,மன்றினிடஞ்சென்றுமறையோர்கடொண்டர்-வா
ர்சடையோர்காவலுடைமரபோர்க்கெல்லா, நன்றெங்கள்
கணபதிதன்சொல்லிதென்று நன்மையுடன்மன்னவனுர்ந
விலுங்காலை. (௰௮)

(இ-ள். என்றிவ்வாறு நம்பியாண்டார்க்கு தயையாய் மெய்ப்பொருளாகிய இனியதிருநெறித் தமிழ்வேதத்தின்பெருமையை விநாயகர் உபதேசித்தருளியவாறு நம்பியாண்டார் தமக்குச்சொல்லியருள க்கேட்டு- குலசேகரமகாராஜாவானவர் ஒருமலையானது பெரியவுருவங்கொண்டாற்போன்றுள்ள பொல்லாப்பிள்ளையாரது திருவருளையுள்ளத்திற்கொண்டு சிதம்பரத்தின்கண்வந்து தில்லைவாழந்தணர் மூவாயிரவர்க்கும் * அடியார்களுக்கும் 0 மடபதிகளுக்கும் ... அகம்படிமைத்தொழிலினர் முதலியஅனைவர்க்கும்நமது பொல்லாப்பிள்ளையார்சொல்லியருளிய முறையின்னதென்று மனக்களிப்புடன் தெரிவித்தபோதில் என்க.

அத்தகையோர்தமிழ்வைத்தமூவர்வந்தா லறைதிறக்குமெ
னவுணாக்கவரசன்றனு, மெய்த்தகுசீரம்பலவர்க்குற்றசெ
ல்வ - விழாவெடுத்துவிளம்புதமிழ் மூவர்தம்மை யுய்த்த
ணிவீதியினிலுலாவருவித்தும்பர்- நாயகன்றன்கோயில்வ

---

* நாற்பத்தெண்ணாயிரம்மகேசுரர்கள்.
0 எழுநூறுதிருமடத்துமுதலிகள்.
... ஏழாயிரத்துத்தொளாயிரவராகிய கோயில்திருத்தொண்டு செய்பவர்கள்.

லம்மாக்கியுள்ளே,சித்தமெலா முருக்குதமிழிருக்கைசேரச்
சேர்த்தியவர்சேர்ந்ததெனச்செப்பிநின்றான். (௰௯)

(இ-ள்.) அவ்வாறுகேள்வியுற்ற தில்லைவாழந்தணர் முதலாயினோர் திருநெறித் தமிழ்வேதத்தைச்சேமித்துவைத்த (சமயாசாரியராகிய)மூவரும் வந்தால் அச்சேமித்த அறைதிறக்குமென்று சொல்லுதலும்மகாராஜாவும் மெய்ம்மையுள்ள சிறப்பையுடையநடேசர்க்கு விபவம்பொருந்திய திருவிழாச்செய்து திருமுறையோதியருளிய மூவரையும்எழுந்தருளப்பண்ணித் திருவீதியில் உலாவருவித்து நடராஜாதிருக்கோயிலினுள்ளே பிரதக்ஷிணம்பண்ணுவித்து ஆன்மாக்களதுசித்தத்தையெல்லாம்உருக்காநின்ற திருமுறைச்சேமத்தின்கண் கொணர்ந்துசேர்த்தினபடிசேர்ந்ததென்று சொல்லிநின்றனர்-என்க.

ஐயர்நட்டமாடுமம்பலத்தின்மேல்பா-லருள்பெற்றமூவர்த
மதருள்சேர்செய்ய, கையதுவேயிலச்சினையாயிருந்தகாப்
பைக-கண்டவர்களதிசயிப்பக் கடைவாய்நீக்கிப், பொய்யு
டையோ ரறிவுதனைப்புலன்கண்மூடும் - பொற்பதுபோற்
போதமிகும்பாடறன்னை, நொய்யசிறுவன்மீகமூடக்கண்
டு-நொடிப்பளவினிற்சிந்தைநொந்தவேந்தன் (௨௰)

(இ-ள்.) சிவபெருமான் திருநடனஞ்செய்கின்றசிற்சபையின்மேல்பால்திருவருள்பெற்றமூவரும்தமதுகருணைசேர்ந்தசெவ்வியதிருக்கரமேஅடையாளமாகப்பொறித்திருந்தசேமத்தைப் பார்த்தவர்கள்அதிசயிக்கக் கதவைத்திறந்து பொய்ம்மையுடையோர்களது அறிவைப் புலன்கள்மறைத்திருக்குந்தன்மைபோல் சிவஞானம்பயத்தலின்மிக்கதாயிருக்கின்ற திருமுறையை நொய்மையாகிய சிறிய செல்லுப்புற்றானது மூடியிருக்கப்பார்த்து அந்நிலையேமனம்வருந்திய மகாராஜாவானவர்-என்க.

பார்த்ததனைப்புறத்துய்ப்பவுணாத்துமேலே-படிந்திருந்த
மண்மலையைச்சேரத்தள்ளிச், சீர்த்ததிலதயிலமலிகும்பங்
கொண்டு செல்லுநனையச்சொரிந்துதிருவேடெல்லா, மா
ர்த்தவருளதனாலே யெடுத்துநோக்க வலகிலாவேடுபழு
தாகக்கண்டு,தீர்த்தமுடிக்கணிபரனேபரனேயென்னச்-சி
ந்தைதளர்ந்திருகணீர்சோரநின்றான் (௨௧)

(இ-ள்.) அவ்வாறுபார்த்த திருமுறையைப் புறத்தேயெடுத்துவைக்கும்படி கட்டளையிட்டு மூடியிருந்த புற்றுமண்குவையை முழுதுநீக்கித் தெளிவாகிய எண்ணெய்க்குடங்களால்செல்லுநனையும்படியூற்றித்

திருவேடெல்லாவற்றையும் மிக்கதிருவருளா லெடுத்துநோக்குதலும் அளவற்றஏடுகள்பழுதாயிருக்கக்கண்டு கங்கையைச்சடையில் அணிகின்றபரமனே பரமனேஎன்றுவாய்விட்டுச்சிந்தைதளர்ந்துஇரண்டுகண்களிலும்நீர்பெருகும்படித் துயரமுற்றுநின்றனர்-என்க.

ஏந்துபுகழ்வளவனிவ்வாறன்பினலே யிடர்க்கடலின்கரைகாணுதினையுங்காலேச், சார்ந்தமலைமகள் கொழுநனருளால்வேதச் சைவநெறித்தலைவரொனு மூவர்பாடல், வேய்ந்தனபோன்மண்மூடச்செய்தேயீண்டு வேண்டுவனவைத்தோமென்றுலகிலுள்ள, மாந்தரொடு மன்னவனுங் கேட்குமாற்றுல்-வானகத்திலோரோசையெழுந்ததன்றே·(உ௨)

(இ-ள்) விரிந்தபுகழையுடைய சோழமகாராஜாவானவர் சிவநேசத்துடன் இவ்வாறுதுன்பமாகிய சமுத்திரத்தின் கரைகாணுமல்வருந்தினபோது இடப்பாகத்தி லிருக்கின்றபார்வதியார்மணவாளரது திருவருளால் வேதசித்தாந்த சைவசமயத்தலைவராகிய மூவரது திருப்பாடல்களைக்கவசமிட்டாற்போல் மண்ணால்மூடும்படிசெய்து இக்காலத்திற்கு வேண்டுவனவற்றைத் தெரியும்படிவைத்தோமென்றுஉலகிலுள்ள மனிதர்களும் அரசனுங்கேட்கும்படி ஆகாயத்தின்கண் ஒருஓசையானது எழுந்தது-என்க:

அந்தமொழிகேட்டலுமேமன்னன்றுனு மாடினன்பாடினனலக்கண்யாவுஞ், சிந்தினைமுதமுண்டான்போலநெஞ்சந்-தேறினனம்பிதிருவடியிற்றுழ்ந்தான், பந்தமறுசிவனடியார்கொள்கவென்றுப் பண்டாரந்திறந்துவிட்டான்பரிவுகூர்ந்தான், இந்தவகைப்பெருங்களிகொண் மன்னன்றுனு மெழின்முறையைமுன்போலவகுக்கவெண்ணி. ()

(இ-ள்.) அவ்வசரீரித்திருவாக்கைக் கேட்டமாத்திரத்தில் மகாராஜாவும் ஆநந்தக்கூத்தாடினர் பாடினர் தமது உள்ளக்கவலைமுற்றும்நீங்கினர் தேவாமிர்தங்கிடைத்து உண்டாற்போல மனக்குறைநீங்கினவராகி நம்பியாண்டாருடைய திருவடிகளில்வணங்கி அவிச்சைத்தொடக்கைநீக்கியசிவனடியார்கள்கொள்ளக்கடவதென்று அன்புமிகுந்து பொக்கிஷச்சாலையைத் திறந்துவிட்டார் - இவ்வாறு பேரானந்தவசத்தராய்ச் சோழமகாராஜாவுந தெய்வத்தன்மையுள்ளதிருமுறையை முன்னுளிலிருந்தவாறு வகைப்படுத்தும்படி நினைந்து-என்க.

மன்னுதமிழ்விரகரொங்கள்காழிவேந்தர் - வகுத்தருளாலமைத்ததிருமுறையோர்மூன்றும்,அன்னவகைவாகீசர்மு

றையோர்மூன் று மாரூரருளாத்ததிருமுறையதொன்றுந்,
துன்னவகையேழாகத்தொகுத்துச் செய்தான்– றாயமநு
வெழுகோடியென்பதுன்னித், தன்னிகரிறிருவருளான்ம
ன்னன்றானுந் தாரணியோர்வீடுபெறுந் தன்மைசூழ்ந்தே.

(இ-ள்.) நிலைபெற்ற திருநெறித்தமிழ்விரகராகிய எமது திருஞான சம்பந்தப்பிள்ளையார், சிவபெருமான் அருளால் வகுத்துச்சொல்லிய திருமுறைகள் ஒருமூன்றும், அவ்வாறு திருநாவுக்கரசுசுவாமிகள்சொல்லிய திருமுறைகள் ஒருமூன்றும், சுந்தரமூர்த்திசுவாமிகள் ஓதிய திருமுறை ஒன்றுமென, அவற்றின்வகுப்புஏழாகத்தொகுத்தனர்- தூய்மையான மந்திரங்கள் ஏழுகோடியாயிருக்கின்றவகையை அநுசரித்துத் தனக்குத்தானேயிணையாகிய திருவருளைமுன்னிட்டுச் சோழமகாராஜாவும் உலகத்திலுள்ளோர் பேரின்பவீடுபெறுகின்ற தன்மையையாலோசித்து-என்க.

பண்புற்றதிருஞானசம்பந்தர்பதிகமுந்நூற்
றெண்பத்திநான்கினிலங்குதிருமுறைமூன்று
நண்புற்றநாவரசர்முந்நூற்றேழ்மூன்றினல்
வண்பெற்றமுறையொன்று நூற்றினல்வன்றொண்டர் (௨௫)

(இ-ள்.) நன்மைமிகுந்த திருஞானசம்பந்தப்பிள்ளையார் பதிகம் முந்நூற்றெண்பத்தினான்குபாசுரங்களால் திருமுறைகள்மூன்றும் சிவநேசமிக்க திருநாவுக்கரசுசுவாமிகள் பதிகம் முந்நூற்றேழுபாசுரங்களால் திருமுறைமூன்றும் அருள்வளம்பெற்ற சுந்தரமூர்த்திசுவாமிகள்பதிகம் நூறுபாசுரங்களால் திருமுறையொன்றுமாம்-என்க.

ஆகவளர்திருமுறையேழருட்டிருவாசகமொன்று
மோகமெறிதிருவிசைப்பாமாலைமுறையொன்றுசிவ
போகமிகுமந்திரமாமுறையொன்றுபுகழ்பெறவே
பாகமிகுந்திருமுறைகள்பத்தாகவைத்தார்கள். (௨௬)

(இ-ள்.) இவ்வாறாக ஓங்குந்திருமுறைகள்ஏழும்அருள்வாக்காகிய திருவாசகத்திருமுறையொன்றும் மோகமாகியசாட்டைப் பற்றறுக்கின்ற திருவிசைப்பாமாலைத் திருமுறையொன்றும் சிவபோகமிகுந்ததிருமந்திரத்திருமுறையொன்றுமெனப் புகழ்பரவும்படி சத்திநிபாதத்தை மிகுவிக்கின்ற திருமுறைகள்பத்தாக ஏற்படுத்தினர்- என்க.

வைத்ததற்பினம்பிகழன்மன்னர்பிரான்மகிழ்ந்திறைஞ்சிச்
சித்திதருமிறைமொழிந்ததிருமுகப்பாசுரமுதலா

வுய்த்தபதிகங்களையுமொருமுறையாச்செய்கவெனப்
பத்திதருந்திருமுறைகள்பதினொன்றாப்பண்ணினார். (உஎ)

(இ-ள்.) அவ்வாறு ஏற்படுத்தியபின்பு நம்பியாண்டாரது திருவடியைமகிழ்வுடன் மகாராஜாவானவர்பணிந்து இஷ்டசித்தியைப் பிரசாதித்தருளுகின்ற சிவபெருமான்வரைந்தருளின திருப்பாசுரமுதலாகஎண்ணப்பட்ட திருப்பதிகங்களையும் ஒருதிருமுறையாகச்செய்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தவாற்றால் அத்திவ்யப்பிரபந்தத்திருமுறையும்சேர்த்துச் சிவபக்திநெறியைத்தருகின்ற திருமுறைபதினொன்றாகச்செய்தனர்-என்க.

மந்திரங்களேழுகோடியாதலினான்மன்னுமவ
ரிந்தவகைத்திருமுறைகளேழாகவெடுத்தமைத்துப்
பந்தமுறுமந்திரங்கள்பதினொன்றுமாதலினா
லந்தமுறைநான்கினொடுமுறைபதினொன்றாக்கினார். ()

(இ-ள்.) மகாமந்திரங்கள் சப்தகோடியாதலால்நிலைபெற்ற நம்பியாண்டார் இவ்வகைக்கேற்பத்திருமுறைகள் ஏழாகஏற்படுத்திவைத்து சேர்க்கையானமந்திரங்கள் பதினொன்றுமாதலால் அவைக்கேற்ப அவ்வேழுடன் திருவாசகத்திருமுறைமுதலியநான்குஞ்சேர்த்துத் திருமுறைகள் பதினொன்றாக அமைத்தனர்-என்க.

ஆக்கியபின்திருத்தொண்டத்தொகையடைவையருளாலே
நோக்கியபின்னாயன்மார்நுடங்கடைவுந்தொழிற்பேறும்
பாக்கியத்தாலிபமுகத்தோனருள்செய்தபகுதியினால்
வாக்கியல்சேரந்தாதிநம்பியடைவேவகுத்தார். (உகூ)

(இ-ள்.) அவ்வாறு அமைத்தபின்னர் சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த திருத்தொண்டத்தொகையின்முறையைத் திருவருளால் ஆராய்ந்தபின்னர் அத்திருத்தொண்டர்களது அருமையானவரலாற்றையும் திருத்தொண்டுகளையும் அவர்கள் அடைந்துள்ளபேறுகளையும் சுபகரமாகப் பொல்லாப்பிள்ளையார் உபதேசித்தருளியமுறைமைப்படி நம்பியாண்டார் தமது திருவாக்கால் இலக்கணம்அமைந்த திருவந்தாதியெநெறிமுறையே வகைநூலாகச்செய்தருளினர்- என்க.

சீரருள்சேரறுபத்துமூவர்தனிதிருக்கூட்டஞ்
சாருமவரொன்பானுந்தண்டமிழானுரைசெய்து
பேரிசையாம்வகையடைவுபுவியினிடைப்பெருமையினாற்
சீருலவுதிருவெருக்கத்தம்புலியூர்சென்றடைந்தார். (௩௰)

(இ-ள்.) திருவருளையடைந்த அறுபத்துமூவர் தனித்திருப்பேரும் திருக்கூட்டமாகச்சேர்ந்த அடியார் ஒன்பதின்மருமாகிய இவர்களது வரலாற்றை இனியதமிழ்த்திருவந்தாதியாலுரைத்த மூவர்திருமுறைகளுக்கு இசைவகைகளைப்பெறவேண்டி இப்புவிக்கண் பெருமையால் மேம்பட்டிருக்கின்ற * திருவெருக்கத்தம்புலியூரென்னுந் தலத்திற்போய்ச்சேர்ந்தனர்- என்க.

சென்னியருணம்பியிவரங்ஙகணைச்சேர்ந்துசிவன்
மன்னுதிருக்கோயிலினைவலங்கொண்டுபணிந்தரனே
யின்னிசைதந்தருளென்னவிரக்கமுடன்குறைந்திரப்பக்
கன்னியொருபங்குடையோனருள்செய்தகடனுரைப்பாம் (கூக)

(இ-ள்.) சோழமகாராஜாவும் அருள்பெற்றநம்பியாண்டாரும்இவர்முதலாயினோரும் அத்தலத்தின்கண்வந்து பரமசிவம் வீற்றிருக்கின்ற திருக்கோயிலைப் பிரதக்ஷிணம்பண்ணி நமஸ்கரித்துத்திருமுறைகட்குரியஇசைதந்தருளவேண்டுமென்று கனிவுடன் குறையிரந்துவேண்டலும் பார்வதியாரை யொருபாகத்திலுடைய இறைவர்அருளிச்செய்தமுறைமையைச்சொல்வாம்- என்க.

நல்லிசையாழ்ப்பாணனார்நன்மரபின்வழிவந்த
வல்லியொருத்திக்கிசைகள்வாய்ப்பவளித்தோமென்று
சொல்லவவளையழைத்துச்சுருதிவழிப்பண்டழுவு
நல்லிசையின்வழிகேட்டுநம்பியிறையுண்மகிழ்ந்தார். (கூஉ)

(இ-ள்.) இனிமையானஇசைநூலில்வல்ல திருநீலகண்டயாழ்ப்பாணநாயனாரது திருமரபிற்பிறந்துள்ள ஒருபெண்ணுக்கு திருமுறைகட்குரிய இசைத்திறங்களினது தேர்ச்சிசித்திக்கும்படி தந்தருளினோமென்று பரமசிவம் அநுக்கிரகிக்க அப்பெண்ணைவருவித்துச் சுருதிமுறையால்பண்கள்பொருந்துகின்ற இனியஇசைத்திறங்களைக்கேட்டு நம்பியாண்டாரும் சோழமகாராஜாவும் உள்ளங்களித்தனர்-என்க.

ஆங்கவளையம்பலத்துளாடுவார்திருமுன்பே
பாங்கினுடன்கொடுவந்துபண்ணடைவுபயில்பாட
லோங்கருளான்முறைபணித்தற்கொக்குமெனவோரோசை
நீங்கரியவானின்கணிகழவரசன்கேட்டான். (கூகூ)

(இ-ள்.) அவ்வாறே அப்பெண்ணை அம்பலத்தில்ஆடுகின்ற நடேசரதுசந்நிதியில் சிறப்புடன் அழைத்துவந்து பண்களின்முறைதழுவி

* நடுநாட்டிலுள்ளசிவஸ்தலங்கள் இருபத்திரண்டுள்ஒன்று.

ன்றதிருநெறிப்பனுவல்களைப் பெருகுகின்றதிருவருளால் முறையேபா டுவித்தல் தகுதியாமென்று ஒரு அசரீரிவாக்கானது நீக்கமில்லாதஆ காயத்தின்கண்உண்டாக அதனைச்சோழமகாராஜாகேட்டனர்.

மன்னனுக்குநம்பிக்குமறையவர்மூவாயிரவர்
பன்னரியதிருத்தொண்டர்பலதுறையோர்க்குங்கேட்க
வின்னருண்முன்வியந்துரைத்த விவண்முதலாவிசைத்தவிசை
தென்னிலமேன்மிகத்தோன்றத்திருவருளாற்றேன்றியதாம். ()

(இ-ள்.) அங்ஙனம்சோழமகாராாஜவுக்கும் நம்பியாண்டார்க்கும் தில்லைவாழந்தணர் மூவாயிரவர்க்கும் எண்ணுதற்கரிய திருத்தொண்டர்களுக்கும் இன்னும்பலஇடத்திலுமிருந்தும் வந்தவருமாகியயாவர்க்கும்அவ்வசரீரிவாக்குக்கேட்டளவில் இனியதிருவருள்முன்னிலையில் அதிசயிக்கச்சொல்லிய இவளே முதன்மையானவளாகப்பாடிய இசைத்திறமானது தென்தேசத்தின்கண் மிகவும்விளங்கும்படி பரமசிவத்தின் அருளால் சித்தித்ததாம். என்க. [இவண்முதலாயென்பதற்கு இச்சிதம்பரக்ஷேத்திரமுதலாகஎனவுரைத்தலுமொன்று.]

சொன்னட்டபாடைக்குத்தொகையெட்டுக்கட்டளையா
மின்னிசையாற்றருந்தக்கராகத்தேழ்கட்டளையாம்
பன்னுபழந்தக்கராகப்பண்ணின்மூன்றுளதா
முன்னரியதக்கேசிக்கோரிரண்டுவருவித்தார். (கூரு)

(இ-ள்.) பாடாநின்ற நட்டபாடையென்னும் பண்ணுக்குத்தொகுதியான எட்டுக்கட்டளையாகும்- மதுரமுள்ள இசையொடுபொருந்திய தக்கராகமென்னும்பண்ணுக்கு ஏழுகட்டளையாகும் - சொல்லுகின்றபழந்தக்கராகப்பண்ணுக்கு மூன்றுகட்டளையுள்ளனவாம் - எண்ணுதற்கரியதக்கேசிப்பண்ணுக்கு இரண்டுகட்டளை யுள்ளனவாகவருவித்தனர்.

மேவுகுறிஞ்சிக்கஞ்சுவியாழகுறிஞ்சிக்காறு
பாவுபுகழ்மேகராகக்குறிஞ்சிப்பாலிரண்டு
தேவுவந்தவிந்தளத்தின்செய்திக்குநான்கினிய
தாவில்புகழ்க்காமரத்தின்றன்மைதனக்கிரண்டமைத்தார் (கூசு)

• (இ-ள்.) நன்மைபொருந்தியகுறிஞ்சிப்பண்ணுக்கு ஐந்துகட்டளையும்- வியாழகுறிஞ்சிப்பண்ணுக்கு ஆறுகட்டளையும் - பரந்தபுகழுள்ள மேகராகக்குறிஞ்சிப்பண்ணுக்கு இரண்டுகட்டளையும் - பரமசிவம்விரும்புகின்ற இந்தளப்பண்ணுக்கு நான்குகட்டளையும் - குற்றமற்றசீருள்ள மதுரமானகாமரமென்னும்பண்ணுக்கு இரண்டுகட்டளையுமாக அமைத்தனர் - என்க.

காந்தாரமாகியபியந்தையாங்கட்டளைக்கு
வாய்ந்தவகைமூன்றாக்கிவன்னட்டராகத்திற்
சேய்ந்தவகையிரண்டாக்கிச்செவ்வழியொன்றாக்கியிசைக்
காந்தாரபஞ்சமத்தின்கட்டளைமூன்றாக்கினார். (கூ௭)

(இ-ள்.) பியந்தைக்காந்தாரமென்னும் பண்ணுக்குப்பொருந்தியக ட்டளைவகைமூன்றும்- வன்மையானநட்டராகத்துக்குக்கட்டளைவகை இரண்டும்- செவ்வழிப்பண்ணுக்குக்கட்டளைஒன்றும்- காந்தாரபஞ்சம மென்னும்பண்ணுக்குக்கட்டளைவகைமூன்றுமாக அளவிட்டனர்-என்க.

கொல்லிக்கு நாலாக்கிக்கௌசிகத்துக்கூறும்வகை
சொல்லிரண்டாக்கிமிகு தூங்கிசைநேர்பஞ்சமத்திற்
கொல்லையிலொன்றாக்கிச்சாதாரிக்கொன்பதாப்
புல்லுமிசைப்புறநீர்மைக்கொன்றாகப்போற்றினார் .(கூ௮)

(இ-ள்.) கொல்லிப்பண்ணுக்கு நான்கும் - கௌசிகப்பண்ணுக்கு உள்ளவகையைச்சொல்லுங்கால் இரண்டும் - மிகுந்ததூங்கல் இசை பொருந்திய பஞ்சமத்திற்குத் தடைபடாதஒன்றும்- சாதாரிக்கு ஒன் பதும்- இசைதழுவியபுறநீர்மைக்கு ஒன்றுமாக க்கட்டளைகள்பொருந் தினர்- என்க.

அந்தாளிக்கொன்றாக்கிவாகீசரருந்தமிழின்
முந்தாயபலதமிழுக்கொன்றென்றுமொழிவித்து
நந்தாதநேரிசையாங்கொல்லிக்குநாட்டிலிரண்
டுந்தாடுங்குறுந்தொகைக்கோர்கட்டளையாவிரித்துரைத்தார். ()

(இ-ள்.) அந்தாளியென்னும்பண்ணுக்குக்கட்டளை ஒன்றாகவும்- அமைத்து (இவைஆளுடையபிள்ளையார் திருமுறைப்பதிகங்கட்கு) அப்பர்சுவாமிகளது அருமைத்திருமுறையுள் முதன்மையான பலதிருப்பதிகங்களின் பண்களுக்கு ஒவ்வொருகட்டளையாகவமைத்து நிலைபெற்ற நேரிசைக்கொல்லிக்கு நிச்சயிக்குமிடத்துஇரண்டுகட்டளையும் இனிதா யொலிக்கின்றகுறுந்தொகைக்குஒருகட்டளையுமாகவிரித்தனர்- என்க.

தாண்டகமாம்பாவுக்கோர்கட்டளையாத்தாபித்தங்
காண்டகைய்ார்தடுத்தாண்டவையாருடெய்யமுறைக்
கீண்டிசைசேரிந்தளத்துக்கிரண்டாகவெடுத்துரைத்து
நீண்டதக்கராகத்துக்கிரண்டாகநிகழ்வித்தார். (சம)

(இ-ள்.) திருத்தாண்டகமென்னும்பதிகத்திற்கு ஒருகட்டளையாகநி ச்சயித்து (திருவெண்ணெய்நல்லூரில்) அருளாளராகிய சிவபெருமா

ன்றடுத்தாட்கொண்டருளின சுந்தரமூர்த்திசுவாமிகள் ஓதிய திருமுறையுள்மிக்க இசைதழுவிய இந்தளத்திற்குக் கட்டளை இரண்டாக எடுத்துச்சொல்லி வளர்கின்ற தக்கராகத்துக்குக் கட்டளைஇரண்டாகநிகழ்வித்தனர்-என்க.

கூறரியநட்டராகத்திரண்டுகொல்லிக்கு
வேறுவகைமூன்றாகமிருந்தபழம்பஞ்சுரத்துக்
கேறுவகையிரண்டாக்கிபின்னிசைதேர்தக்கேசிப்
பேறிசையாறாக்கியதிற்காந்தாரம்பிரித்திரண்டாம். (சகக

(இ-ள்•) சொல்லுதற்கரிய நட்டராகத்துக்கு கட்டளையிரண்டா)வும். கொல்லிப்பண்ணுக்கு வெவ்வேறுவகையில் மூன்றாகவும் { இனிமைமிக்க பழம்பஞ்சுரத்திற்கு ஏற்றவகை இரண்டாகவும்- ஏற்படுத்தி இனியஇசைமுற்றிய தக்கேசிக்குஆறாக்கி- அதில்நின்றும் காந்தாரப்பண்ணனது பிரிக்கப்பட்டு இரண்டுவகையாம்-என்க.

ஒன்றாகுங்காந்தாரபஞ்சமத்துக்கோரிரண்டா
நன்றானசீர்நட்டபாடைக்குநவின்றுணாக்கிற்
குன்றாதபுறநீர்மைக்கிரண்டாகுங்கூறுமிசை
யொன்றாகக்காமரத்துக்கொன்றாகப்போற்றினார். (சஉ)

(இ-ள்•) காந்தாரபஞ்சமத்துக்கு இசைஒன்றாகவும்-நன்மையமைந்த சீர்மையுள்ளநட்டபாடையென்னும் பண்ணுக்கு இசைஇரண்டாகவும்- ஆராய்ந்துசொல்லுமிடத்து குன்றுதலில்லாத புறநீர்மைப்பண்ணுக்கு இரண்டாகவும்- சொல்லாநின்ற காமரப்பண்ணுக்குப் பொருத்தமான இசைஒன்றாகவும்-நிருமித்தனர்-என்க.

உற்றவிசைக்குறிஞ்சிக்கோரிரண்டாகவருத்தமைத்துப்
பற்றியசெந்துருத்திக்கொன்றாக்கிக்கவுசிகப்பாற்
றுற்றவிசையிரண்டாக்கித்தூயவிசைப்பஞ்சமத்துக்
கற்றவிசையொன்றாக்கியரனருளால்விரித்தமைத்தார். (சந)

(இ-ள்.) குறிஞ்சிப்பண்ணுக்குஅமைந்த இசைஇரண்டாகவகுத்து எண்ணுதற்கரிய செந்துருத்தியென்னும்பண்ணுக்கு இசை ஒன்றாக்கி- கௌசிகப்பண்ணுக்குப்பொருந்திய இசைஇரண்டாக்கி நுட்பமானபஞ்சமப்பண்ணுக்குஉரித்தானஇசை ஒன்றாக்கிஇவ்வாறு சிவபெருமான் திருவருளால்பண்ணடைவு விளங்கும்படியமைத்தனர்-என்க.

இந்தவகைச்சிவன்செவிப்பாலெக்கண்ணுந்தழைத்தோங்க
வந்தமிலாவறுபத்துமூவரருளம்புவிமே
னந்தியிடமும்மலமுநல்லுலகோர்நீங்கியிடச்
சிந்தையருட்சிவமாகத்தெளிவித்தானருட்சென்னி. (௪௪)

(இ-ள்.) இவ்வகையாகப் பரமசிவத்தின் திருச்செவிக்கேற்க எத்திசையும்பெருகவும் அழிவில்லாத அறுபத்துமூன்றுநாயன்மார்களது திருவருள் அழகிய உலகின்கண் வியாபிக்கவும் நிலையுலகத்தின்கண் உயிர்கள் மலரகிதமாகிமுத்திபெறவும் சிந்தையானது அருள்மேனியாகிய சிவாகாரமாகநின்று யாவரையுங் கடைத்தேற்றுவித்தனர் - ஜீவகாருண்ணியத்தையுடைய ராஜராஜஅபயகுலசேகர மகாராஜாவானவர்-என்க.

சீராருந்திருமுறைகள்கண்டதிறற்பார்த்திபனு
மோராருமிறைவனையுமெழிலாருநம்பியையு
மாராதவன்பினுடனடிபணிந்தங்கருள்விரவச்
சோராதகாதன்மிகுந்திருத்தொண்டர்பதந்துதிப்பாம். (௪௫)

(இ-ள்.) சிறப்புமிக்க திருமுறைகளையெடுத்துத்தந்தருளிய பத்திவைராக்கியமுள்ள சோழமகாராஜாவாகிய அருள்நிறைந்த முதல்வரையும் சிவஞானமிக்க நம்பியாண்டாரையும் இடையறாத வுள்ளன்புடனே திருவடிகளில்வணங்கி அவ்வாறே மலபரிபாகங்கிடைக்கும்படிச்சோர்வில்லாத சிவநேசமிக்க திருத்தொண்டர்பாதங்களைத்துதிசெய்வாம்-என்க.

திருமுறைகண்டபுராண

முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௪௬.